ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு ௭	மெய்கண்டான்யாண்டு-௭௱௬ ஆடித்திங்கள் 1929ஆ ஆகஸ்டுமீ—செப்டம்பர்மீ	பரல் ௩

திருச்சிற்றம்பலம்

திருவுமெய்ப் பொருளுஞ் செல்வமு மெனக்குன்
  சீருடைக் கழல்களென் றெண்ணி
ஒருவரை மதியா துறுமைகள் செய்து
  மூடியு முறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திரு முல்லை
  வாயிலாய் வாயினா லுன்னைப்
பரவிடு மடியேன் படுதுயர் களையாய்
  பாசுப தாபரஞ் சுடரே.

சுந்தரர்.

உரை.

திருவுமென்றது, தவத்திரு; மெய்ப்பொருளு மென்றது உரிமையான உண்மைப்பொருள்; செல்வமு மென்றது, பேறு; எண்ணி யென்னும் வினையெச்சம் காரணப்பொருளது. உறுமைகள், பொருந் தாத செயல்கள்; அவை மதியாமை பற்றி வருஞ் செயல்களென்க. அங்ஙனம் அவை செய்து எவரோடும் இணங்காமல் கொடுமையுடைய னாய்த் திரிவேன் என்பார், 'ஊடியும் உறைப்பனாய்த் திரிவே'னென் றார். ஊடுதல், உள்ளம் பிரிதல், உறைப்பு, வன்மை. முருகு, மணம்.

ஈண்டுப் படுதுய ரென்றது, கண்மறைந்த துயரை. இஃது, இப்பதிகத்தின் மூன்ரும் பாட்டில் நாயனுர் "சங்கிலிக் காவென் கண்கொண்ட பண்ப, நின்னடியேன் படுதுயர் களையாய்" என்று அருளிச்செய்தலின் வைத் தறியப்படும்.

பிழையுளன பொறுத்திடுவ ரென்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளா யேயென்ன
உழையுடையா னுள்ளிருந் துளோம்போகீ ரென்ருனே.

பிழைத்தக்கால், காலீற்று வினையெச்சம்; காலீறு மூன்று காலமும் பற்றி வருமாகலின், ஈண்டு அது இறந்த காலத்தின்கண் வந்தது. இதனியல்பினை "பின்முன் கால்கடை" (தொல், சொல், உஉ௯) என்னும் வினையியனூற்பாவுக்கு ஆசிரியர் சேனவரையருரைக்கும் உரையானு மறிக. பழி, மறைத்தா ரென்னும் பழி. 'குழைவிரவு வடிகாது,' குழை பொருந்திய தொங்கிய செவி; 'கோயிலுளாயே' யென்பதன் ஏகாரம் வினு உழையுடையான், அவ்விடத்தை யுடையானென்பது: கண்மறைந்த பின் நம்பியாரூரர் திருவெண்பாக்கம் அடைந்து இறைவனை வணங்கிக் கோயிலுள் இருக்கின்றீர்களா வென்று வினவலும். ஆண்டவன் அவர்க்கோர் ஊன்றுகோலருளி 'உளோம் போகீ' ரென்ருரென்பது வரலாறு.

"வணங்கி நீர்மகிழ் கோயிலு ளீரே யென்ற வன்ரெருண்டர்க்
[கூன் றுகோ லருளி
யிணங்கி லாமொழி யாலுளேம் போகீ ரென்றி யம்பினு
[ரேதிலார் போல்"
(ஏயர்கோன், உ௭௯)

என்பர் சேக்கிழார் பெருமான்.

எண்ணி யிருந்து கிடந்து நடந்தும்
அண்ணலே ஞநினை வார்வினை தீர்ப்பார்
பண்ணிசை யார்மொழி யார்பலர் பாடப்
புண்ணிய ஞருறை பூவண மீதோ.

இருந்து கிடந்து நடந்து மென்ருர்; எப்போதும் எத்தொழிற்கண்ணும் இறைவனது திருவருணினைவின யுடையரா யிருத்தல் வேண்டு மென்றற்கு. பண்ணிசையார் மொழியா ரென்பவற்றில் முதல்

நின்ற 'ஆர்' என்பது நிறைத லென்னும் பொருட்டான வினைச்சொல் எனவும், பின் நின்ற 'ஆர்' என்பது பல்லோர் படர்க்கை விகுதிப் பொருட்டான இடைச்சொல் லெனவுங் கொள்க. புண்ணியன், வினை யில்லாதவன்; இச்சொல் சிவபெருமானுக்கே ஒரு சிறப்புப் பெயராகப் பிங்கலந்தையில் வகுத்துரைக்கப்படுதல் பெரிதும் நினைவுகூரற் பாலது.

இளவழகனுர்.

ஒளியிெனுளி

(திரு. அ. சிதம்பர நாதன் அவர்கள் பி. ஏ.)

ஒளியென்ற சொல்லை 'பெரிய மதிப்பு' என்னும் பொருளில் திருவள்ளுவர் ஆண்டுள்ளா ரென்பது 'ஒளி யொருவற்குள்ள வெறுக்கை' எனவரும் திருக்குறட்பாவிற்கு வரையப்பட்டிருக்கும் உரையிலிருந்து தெரிகிறது. அதுபற்றி இக்கட்டுரையின் தலைபங்கம் வெளிச்சத்தின் பெருமை அல்லது பெரிய மதிப்பு என்னும் பொருளில் வைக்கப் பட்டிருக்கிறது. இறைவனே ஒளிமயமாயுள்ளவ னென்பது 'சோதியே சுடரே சூழொளி விளக்கே' என்ற மாணிக்க வாசகரின் மாணிக்க வாசகத்தாலும் 'உயிர்க்குயிரா யொளிதானுகி' என்ற இராமலிங்க சுவாமிகளின் அருளுரையாலும் இன்னவை யன்ன பலவேறு உரைகளாலும் தெரியவரும். ஒளிமயமாயுள்ள பேரொளியைக் காண சிற்றொளியி னுதவி வேண்டியதா யிருக்கிறது. இதனுண்மை பெரிய காந்த விளக்கை யேற்றுவதற்குச்சிறிய பந்தத்தின் உதவி வேண்டியிருப் பதிலிருந்து புலப்படும். அப்பேரொளியைக் காண நாம் சிற்றொளி காட்ட வேண்டியவர்களா யிருக்கிறோம். ஆகலின், கோவில்களிலுள்ள பேரொளி வடிவைக் காணச் செல்லும் நாம் சூடன், நெய் முதலியவற்றிலிருந்து சிற்றொளி காட்டவேண்டிய வர்களா யிருக்கிறோம், அச்சிற் றொளிதானும் கோவிற் செலவி லேயே காட்டப்படுகிறதெனினும் அவரவர் தத்தமது விளக்கைக் கொண்டு காண்பதே நலம். வீண் ஆடம்பரங்களில் அனேக காசைக் கொட்டும் நாம் கடவுளைக் குறித்து, பேரொளியின்

பெரும் வடிவத்தைக் காணும் பொருட்டு ஏன் ஒரு சில காசுகள் விளக்கேற்றல் முதலிய நல்வழிகளில் செலவிடக் கூடாது? வறுமையுற்ற காலத்தும் பொருளற்ற காலத்துங் கூட அஞ்சாது நின்று அருளொளியைக் காணும் பொருட்டு சிற்றொளி பரப்பிச் சிறப்புற்ற நம் நாட்டுப் பெரியார்களின் வரலாறுகள் நம்மை அவ் வழியிற் புகுத்துமென்பது திண்ணம். ஆகலின், அவ்வரலாறுகளில் மூன்றைக் கீழே தருகின்றனம்.

இருக்குவேளூரில் அளவற்ற பெருஞ் செல்வம் படைத்த ஒருவர் இருந்தார். மெய்ப் பொருளாவது ஈசன் கழலென்றும் பொருள் பெற்றதன் பயன் சிவன் கோவிலிற் குறையாமல் விளக்கிடுதலென்றும் கருதினார். பன்னாட் சென்று அவர் செல்வமெல்லாம் 'நீரிற் குமிழிபோற் செல்வம்' என்பதற்கொப்ப மறைந்தன. எனினும் அஞ்சாதவராய்த் தில்லை நகர்க்குச் சென்று இறைவனை இறைஞ்சி, திருப்புகலீச்சுரம் சேர்ந்து வீட்டிலுள்ள எஞ்சிய பொருள்களையும் விற்று விளக்கெரிக்கும் பணியை நடத்திவந்தார். அப்பொருள்களு மொழிந்த பின், பிறரிடஞ் சென்று இரக்க மனமிலாதவராய், தனது நெற்றி வியர்வை நிலத்தில் விழும்படி புல் செறிந்த நிலஞ் சென்று புல்லை யரிந்து வந்து புனைந்து, அப்புனைகளை விற்று, அதனால் வரும் பொருளைக் கொண்டு நெய் பெற்று விளக்கெரித்து வந்தார்.

இவ்வாறு செய்து வருங்கால், ஒரு நாள் புற்புனை எவ்விடத்தும் விலைபோகவில்லை. அது கண்ட பெரியார் தான் கொண்டு வந்த புல்லைக் கொண்டு விளக்கெரிக்கத் தொடங்கினார். புல்லானது இயல்பாற் புன்மையானதாகலின் எளிதில் எரிந்தொழிந்தது. பின்னும் விளக்கொளி பரப்பும் விழைவுடை விழுமியர் தமது திருச்சிகையை அரிந்து அன்புடன் அதையிட்டு விளக்கெரித்தார். இவ்வாறு பொங்கிய அன்புடன் செய்த பொருவில் திருத்தொண்டர் எம்பிரானருளுக் குரியரானார்.

இரண்டாவதாக, திருவொற்றியூரில் தைலத் தொழிலாளர் குலத்துப் பிறந்து பெருஞ் செல்வவானா யிருந்து கொல்லை மழ

விடையார் கோவிலில் உள்ளும் புறம்பும் அல்லும் பகலும் விளக்கெரித்த கலிய நாயனர் வரலாற்றைக் காண்போம். நெடு நாளாக அவர் செய்து வந்த பணிமுட்டும்படி அவர் செல்வமழிந்தது. ஆயினும் தளராது தாளாற்றிப் பொருள் பெற்றுப் பணி செய்யுங் கருத்துடன் தமது குலத்தவர்கள் கொடுத்த எண்ணெயைக் கூடையில் வைத்துச் சுமந்துபோய் தெருதோறும் சென்று விலைகூவி எண்ணெயை விற்றுக் கூலிபெற்று வந்தார். அக்கூலியைக் கொண்டு விளக்கேற்றும் பணி முட்டுருது நடத்திவந்தார். சின்னுள் கழிந்தபின், அவ்வேலையை இழக்க நேரிட்டது. பின்னர்ச் செக்கை ஓட்டிக் கூலிபெற்று அதனுல் தம்பணியைப் புரிந்துவந்தார். அந்த் வேலையையும் இழக்க நேரிட்டது. பின். தம்மனைவியையும் விற்கமுற்பட்டார், தெருதோறுஞ் சென்று விலைகூறியும் வாங்குவோரின்மையான் மயங்கினர். மாலைப் பொழுது வந்ததைக் கண்டு கோவிலுட் புகுந்து அகல்களைப் பரப்பித் திரியை யிட்டு எண்ணெய்க்குப் பதிலாகத் தமது குருதியைச் சொரிய நினைத்து வாளையெடுத்துத் தமது கழுத்தை யரியுங்கால், சிவபிரான் அவர் கரத்தைப் பிடித்தருளி முன்னே மழவிடைமேல் தோன்றினர். கண்டுகளித்த கலிய நாயனர் கைலைக் கழைத்துச் செல்லப்பட்டார்.

இனி, நமிநந்தி யடிகள் வரலாற்றைக் கூறுவோம். அவர் ஏமப்பேரூரில் ஆதிசைவர் குலத்திற் பிறந்தவர். அங்கிருந்து அவர் திருவாரூர் சென்று புற்றிடங் கொண்டாரைப் பணிந்து அறநெறி யப்பரைக் கண்டு வணங்கினர். அப்பர்க்கு எண்ணில் தீபமேற்றுங் கருத்துடன் கோவிலை விட்டு நீங்கினர். ஊரினுட் சென்று வருவதற்குள் பொழுது சாயுமே என்று நினைத்து அருகிருந்த மனையொன்றிற் புகுந்து நெய்வேண்டினர். அம்மனையிலிருந்த அமணர் "கையில் விளங்கு கனலுடையார் தமக்கு விளக்கு மிகை காணும். விளக்கேற்றுவீராயின் நீரை முகந்தெரியும்" என்றுர். அடிகளின் நெஞ்சு புண்ணடைந்தது. செய்வதென்னவென்றறியாது திகைத்த அடிகள் கேட்கும் வண்ணம் 'குளத்து நீர் கொணர்ந்து எரிக்க' என ஒருரை விசும்பிடைப் பிறந்தது. தந்தையுந் தாயும் தநயனுமாய நற்றந்தையைச் சிந்தை செய்து

கொண்டு பொய்கையிற் புக்கு நாதர் நாமம் நவின்றேத்தி, நீர் முகந்து கொண்டு போய் முறுக்கிய திரிமேல் வார்த்தார். விளக்கெல்லாம் சுடர் விட்டெரிந்தன. குறையுந் தகளிகளுக்கெல்லாம். விடியுமளவும் எரியும் வண்ணம் நீர் வார்த்துத் தம்பதிக்குச் சென்றார்.

மேற் கூறப்பட்ட மூன்று வரலாறுகளிலிருந்தும் விளக்கொளி பரப்புதல் சிறந்ததோர் நல்வினை யென்பது தேற்றம். கணம்புல்லநாயனார் புல்லையிட்டெரிக்க அதனின்றும் ஒளிபிறந்தது. அவர் தமது திருமுடியையும் சிதைத்து எரித்தனர் என்றால் அப்பணியின் பெருமை யென்னே! மனைவியையும் விற்க முற்பட்டு வாங்குவோரின்மையால் வருத்தமுற்றுத் தமது குருதியைச் சொரியுங் கருத்துடன் மிடற்றிடை வாளைவிடுத்த கலிய நாயனாரின் வரலாறு இப்பணியின் சிறப்பை வலியுறுத்துகின்றது. நமிநந்தி யடிகள் நீரையிட்டு விளக்கொளி யெழுப்பிய வரலாறு அவர் தம் அன்பின் பெருமையைக் காட்டுகின்றது. தண்ணீர்க்குத் தனியாக ஒளியில்லை யென்பதுண்மையேயாயினும் தண்ணீருடன் வேறு சில பொருள் சேர்ந்துழி, அதற் கொளியுண்டாம். இருட்டறையில் கடல் நீரை வைத்துப் பார்த்தால் அதனின்றும் ஒளியெழும்பக் காணலாம். அஃதெவ்வாறெனின் கடல் நீரில் (Phosporescence) பாஸ் பொரிஸான்ஸ் என்னும் ஒருவிதப் பொருளிருப்பதால் ஆகும். அதுபோலப் பொய்கை நீற்றில் பாஸ் பொரிஸான்ஸ் போன்ற பொருளாகிய அன்பானது சேர்ந்ததும், அதனின்றும் ஒளிபிறந்தது. அன்பினடியாக நிகழ்த்தப்பட்ட இவ்வருஞ் செயல்களெல்லாம் உலகை வியப்பிக்கின்றன. அவ்வாறு வியப்பிக்கத் தகுந்த அருஞ் செயல்களொன்றும் நம்மால் செய்ய இயலாவிடினும் பொருளுள்ள வரையிலாவது ஓவாது ஒளிபரப்ப முற்படவேண்டும். ஒளியுடைமை யாற்றான் பொன், வெள்ளி, நவமணி முதலிய யாவும் பெரிதும் மதிக்கப்படுகின்றன. அதனாற்றான் அவைகளைக் கொண்டு கோவிலிலுள்ள சிலைகளையும் பிறவற்றையும் அழகுபடுத்துகின்றோம். அணியின் சிறப்பு அணிபவர் சிறப்பாவது போல் அணிவிப்பவர் சிறப்பாதலுமுண்டு. ஒளியின் சிறப்பு ஒளிபடு மிடத்தாவது போல் ஒளிபடச் செய்பவ

ரிடத்தாலுமுண்டு. ஒளியை வளர்த்து ஒளியை ஒளிரும்படி செய்து ஒளிக்கொளியா யுள்ளானை அடைந்த ஒளியினொளியாம் இம்மூவரின் வரலாறு நம்மை ஒளிபடச் செய்வதாக!

மாணிக்க வாசகர் அரசன் பொருளை அரன்பணிக்குச்செலவிட்டது சரியா?

சீர்வாதவூர் மறையோர் சம்பு பாதா சிருதர் தரும்
வாதவூ ரடிகள் கூடற்
பேர்வாய்ந்த வடலரிமர்த் தனற்குத் தென்னன்
பிரமராயன் னெனும் பேரமைச்ச ராகிச்
சார்வாகும் பரிகொள்வா னளவிறந்த தனங்கொண்டு
பெருந்துறையிற் குருந்தி னீழற்
சீர்வாய்ந்த குருவினடி யடைந்தே போற்றி
மாணிக்க வாசகராய்த் திகழ்ந்தா ரன்றே. (1)

திருப்பணிக ளியற்றியிவர் திரும்பப் பெம்மான் தென்னவற்கு
நரிபரியா வாக்கி யீய
உருப்பொலியு மவைநரியா யோட மன்னன் ஈறுத்தலுக்காய்
மண்சுமந்த ஒருவன் வாக்காற்
றிருத்தில்லை சார்ந்துபுத்தர் வாதுவென்று தெரிவைதனைப்
பேசுவித்தல் செய்தே மங்கை
அருத்தன்மேல் வாசகமுங் கோவையுஞ்சொற் றவன்வரைந்து
செலமன்றி லடைந்தார் மன்னோ. (2)

சைவ சமயாசாரியர்களுக்குள்ளே அழுதடியடைந்த அன்பன் என்று விதந்து துதிக்கப் பெற்றவராய் சைவத் திருமுறை பன்னிரண்டனுள் எட்டாவது திருமுறையாகிய திருவாசகம் திருக்கோவை என்ற இரண்டு அருட்பாக்களையும் அருளிச் செய்தவராய் விளங்குபவர் மாணிக்கவாசக சுவாமிகள். இவர் சரிதம் மிகச் சிறக்கத் தமிழர்களால் அறியப் பெறுவது. ஏன்? ஆங்கில மொழி வல்லுநராகிய போப் பாதிரியார் இதன் சிறப்பை யறிந்து

திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தச்சியற்றி அந்தப் பதிப்பின் முகவுரையிலே திருவாசகத்தின் சிறப்பையும் அதனை அருளிய மாணிக்கவாசக சுவாமிகள் சிறப்பையும் அனுபூதி நிலையையும் மிக விதந்து பாராட்டியுள்ளார் என்றால் தமிழர் அல்லாத ஏனை நாட்டினர்களும் சுவாமிகள் சரிதம் பாராட்டினர் என்பது மிகையாகாது. சுவாமிகள் சரிதமானது சுருக்கமாக மேலே காட்டிய இரண்டு பாட்டுக்களாலும் எடுத்து ஓதப்பெற்றுள்ளது.

சுவாமிகள் பாண்டி நாட்டிலே திருவாதவூரிலே பிராமணக் குலத்திலே அமாத்தியர் குடியிலே சம்புபாதா சிருதர் என்ற பெரியாருக்கும் அவரது கற்பிற் சிறந்த மனைவியாராகிய ஞானவதி யம்மையாருக்கும் அருந்தவப் புதல்வராய் அவதரித்தார். திருவாதவூர் என்பது அவரது பிள்ளைத் திருநாமம். இளமையிலேயே கல்வி கேள்விகளில் மிகச் சிறந்து விளங்கினர். அதனைக்கேட்ட அரிமர்த்தன பாண்டியர் அவரை அழைத்துக் கண்டு சிறப்புச் செய்து அவர்க்குத் "தென்னவன் பிரமராயன்" என்ற பட்டஞ் சூட்டித் தம்மிடத்திலே முதன் மந்திரியாராய் வைத்துக் கொண்டனர். மந்திரியார் இராச்சிய பாரம் செய்துவரும் நாளிலே அவர்க்கு ஆன்ம விசாரணை மேலிட்டுச் சற்குருவை நாடியிருந்தார். அக்காலத்துப் பாண்டியர் பெரும்பொருள் கொடுத்துத் தமக்காக நல்ல குதிரைகளை வாங்கும் பொருட்டு மந்திரியாரைத் துறைமுகத்துக்கு அனுப்பினர், அதுதான் திருப்பெருந் துறையாகும். மந்திரியார் அங்குச் சென்றபோது பரமசிவனே குருவடிவந் தாங்கி வந்து அனேக மாணவர்க்கு அறிவுறுத்திக் குருந்த மரத்தடியில் வீற்றிருக்கக் கண்டார். அவரை அடைந்து அவரால் ஆட்கொள்ளப் பெற்று உபதேசமும் செய்யப்பெற்றார். உண்மை தெளிந்தார். உலகை மறந்துவிட்டார். குருவைத் துதித்துச் சொன்ன அருட்பாடல்களே திருவாசகமாம். அதனாலே அவருக்கு இறைவன் மாணிக்கவாசகர் என்ற நாமமும் தந்தனர். அக்காலத்தே தாம் அரசருக்குக் குதிரைவாங்கக் கொண்டுவந்த பெரும் பொருளை எல்லாம் ஈசனுக்கும் ஈசனடியார்க்குமாகச் செலவு செய்தார். இதனை அறிந்த பாண்டியர் இவரை வரவழைத்துத் தமது பொருளைத் தருமாறு வற்புறுத்தி வலிசெய்

தார்; இறைவர் தமது அடியார் பொருட்டு நரிகளைக் குதிரைகளாக்கிக் கொண்டுவந்து பாண்டியரிடம் ஒப்புக் கொடுத்துச் சென்றருளினார். அவை அன்றிரவு மீளவும் நரிகளாகி ஓடின. அரசன் பெருங் கோபங் கொண்டு அன்பரை மீளவும் மிகத் துன்புறுத்தினன். இறைவனாணையால் வைகை பெருகி மதுரை முழுதும் அழித்து ஓட ஆரம்பித்தது. அதனைக் காக்கக் குடிகள் யாவரும் முயன்று கரைகளை அடைக்கலாயினர், அந்நகரில் அன்புடைத் தனியாளான வந்தி என்பவர் பொருட்டுச் சொக்கநாதர் ஆளாய்வந்து கரையடைத்தார். பாண்டியர் கைப்பிரம்படியும் பட்டார். இத்திருவிளையாடலின் மூலம் இறைவன் சுவாமிகளது பெருமையை உள்ளபடி பாண்டியர்க்கு அறிவுறுத்தியருளினார். அங்கிருந்து வெளிப்பட்டுச் சுவாமிகள் திருவுத்தரகோசமங்கை முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருத்தில்லையை யடைந்து தவஞ்செய்து கொண்டிருந்தார். அப்போது சைவ சமயத்தை எதிர்த்து வாதுக்கு வந்த புத்தர்களை இறைவனருளால் வாதில் வென்றனர். ஈழத்தரசன் ஊமைப் பெண்ணையும் பேசும்படி செய்தனர், இறைவன் கேட்கத் திருக்கோவையாரும் சொல்லியருளினார். திருவாசகத்திற்கும் திருக்கோவையாருக்கும் பொருளாவர் ஸ்ரீ நடராசரே எனக் காட்டியருளித் திருவம்பலத்திலே மறைந்து இறைவனோடு இரண்டறக் கலந்தருளினார் என்பது சுவாமிகள் சரிதச் சுருக்கமாகும்.

இந்தச் சரித்திரத்திலே இந்தக் கட்டுரையில் விடயமாக முக்கியமாய் எடுத்துப் பேசவேண்டியது பாண்டியர் குதிரை வாங்குதற்கென்று தம்மிடம் ஒப்புவித்த பொருளை அது செய்யாது அரசனுக்கும் அடியார்க்குமாகச் சுவாமிகள் செலவு செய்தது சரியா? என்ற பகுதியேயாம்.

பரி கொள்வதற்காக அரசர் ஒப்புவித்த பொருளை அவ்வுத்தேசத்திற்கு மாறாகச் செய்யலாமா? இது நம்பிக்கைத் துரோகமும் ஒப்புவித்த பொருளை அபகரித்ததும் ஆகிய குற்றமாகாதா? பொருளுக்குடையவனாகிய எசமானன் சொல்லுக்கு மாறாக அவ

னுடைய பொருளைச் செலவு செய்து ஆளுக்குத் தகுதியாமா? என்று சிலர் கேட்கலாம்.

சிறிது ஆராய்ந்தால் இது சுவாமிகளின் பேரில் சிறிதும் குற்றமாகாது என்பது விளங்கும்.

“அரசன் பரி வாங்கற் கென்றொப்பித்த பொருளைத் திருப்பணியிற் செலவிட்டதோ எனின் அது பக்தி மார்க்கத்தின்பாற் பட்டதாகும். அது பிடியெடுத் தொழுகற்பாலதன்று. அது சுவாமிகள் பக்தி முதிர்ச்சியால் தற்போதமிழந்து செய்த செயல். சுவாமிகள் திருவுள்ளத்தே தீங்கொன்று மிருந்ததில்லை யாதலின் அச்செயலால் அவர்கட்குக் கேடெய்தவில்லை. அப்பொருளைச் செலவழித்துச் செய்த அறங்களான் வந்த புண்ணியம் அப்பொருட் குடையானாகிய பாண்டிய னிடத்திலேயே சேர்ந்தது” என்று ஆசிரியர் ச. திருச்சிற்றம்பலம் பிள்ளை தமது மாணிக்க வாசகர் என்ற நூலில் சொல்லியிருக்கின்றார். இன்னும் பார்ப்போமானால்

“மறத்தாரு கடந்த செங்கோல் வழுதிநின் பொருள்கள் எல்லாம்
அறத்தாற்றி னீட்டப்பட்ட; அனையவை புனிதமான
திறத்தாலே நமக்கும் நம்மைச் சேர்ந்தவர் தமக்கும் ஆர்வம்
உறத்தாவில் வாதவூரன் உதவினன்................................

எனவும்,

.................வேட்கை என்பால் வைத்துனக் கிம்மையோடு
மறுமையுந் தேடித் தந்த உத்தமன்”

எனவும், வரும் திருவிளையாடற் புராணக் கருத்துக்களையும் உய்த்து நோக்கினால் இவ்வுண்மை புலப்படும்.

“.........—...நீரென்
எல்லையில் தவப்பேறாய் வந்திகபர வேதுவாகி
யல்லல் வெம்பிறவி நோய்க்கு மருமருந் தானீரையா”

என்றும்,

..............அருந்துயர் களைவான் மாறாய் நின்றுணையடிக்கே
உய்க்குமருந்த வரிவர் என்ற றியாமை யொறுத்தேனே

என்றும்,

"பாதியுமை யுருவான பரமேட்டி! எனக்கிம்மை
யூதியமும் பரகதியும் உறுதியென விளைவிக்கும்
நீதியினாற் மந்திரியாய் நின்னருளா யவதரித்த
வேதியரை யறியாதே வெறுத்துநா னொறுத்தேனே"

என்றும், வருவனவாகிய பாண்டியர் சொற்களாலேயும் இதனுண்மை தெளியப் பெறுவதாம்.

சுவாமிகள் அப்போதிருந்த மனோ நிலையும் ஆன்மநிலையும் யாதோ என்றால்,

ஒழித்த நோன்பினர்:—ஆடலர், பாடலர்: உலகம் பழித்த செய்கையார்; அழுகையர்: நகையினர்: பாசங் கழித்த கண்களால் அரனுருக் கண்டுலகில் விழித்த கண் குருடாத்திரி வீரரும் பலரால் ;என்றபடி இருந்தது. தற்போதமென்பதே முழுதும் ஒழிந்து சிவபோதமாகிய நிலையில் நிற்போருக்கு உலகாசாரமும் உலகியலும் பற்றுமா? அவர்கள் செயல் உலகத்தாராலே பழிக்கவும் பெறும். அவர்கள் உலகாசாரத்தினின்றும் ஒழிந்தே நிற்பர். உலகியலாகிய விதிகள் அவர்களைக் கட்டுப்படுத்தமாட்டா. உலகியல் விதிகளைக் கொண்டு அவர்கள் சொற் செயல்களை மதிப்பிடுதலும் அமையாதாகும்.

"முன்னமவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னைமறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்றாளே"

என்ற வாகீசத் திருவடிகளின் திருவாக்கின்படி இறைவன் பாலே ஈடுபட்டு அவனே தானாகி நிற்கும் ஆன்மா தன்னையும் உலகத்தையும் துறந்து அதனால் உலக ஆசாரத்தையும் மறந்து அவன் பாதமே தலைக்கூடி நிற்கும் தன்மையை யடையும், இதல்லாமல் வேறொரு வகை நியாயத்தாலேயும் பார்ப்போம். ஒரு எசமானனுக்கு இரண்டு ஆட்கள் இருந்தனர். அவர்களில் ஒரு ஆள் எசமான் பணத்தைக் கொடுத்து மற்றொரு ஆளிடம் இதனைக் கொண்டு அரிசி வாங்கிவா என்றான். அதற்காக அந்த ஆள் அவனை வீ க்குச் செல்லும் வீதியிலே எசமானைச் சந்தித்தான். எசமான் "நீ இப்பொருளைக் கொண்டு அரசி வாங்கவேண்டியதில்லை. அரிசியை விட எனக்குப் பொன் அதிக அவசியமாக வேண்டும். அதனை வாங்கிவா" என்றான். அதன்படியே அந்த ஆள் அப்பொருளைக் கொண்டு பொன் வாங்கிவந்து எசமானிடம் கொடுத்தான். இதில் இந்த ஆள் முன்னையமற்ற ஆள் சொல்லியபடி செய்யவில்லை என்று யாராவது குற்றம் சொல்லமுடியுமா? அவன் சொல்லிய பணியானது எசமான் பணியினாலே மாற்றப்பட்டு எசமான் பணித்ததே நியாயப்படி பணியாகி முடியும் அல்லவா? அதுபோலவே இவ்வுலகமும் அதில் உள்ள சர்வ பதார்த்தங்களும் ஆன்மாக்களும் பரமேசுவரனுக்கு அடிமையாயுள்ளன. அவனே உலகத்துக்கும் உயிர்களுக்கும் எஜமானன். இவற்றைத் தன் சொத்துக்களாகவும் அடிமைகளாகவும் கொண்டு ஆள்பவன் இது சர்வசமய சர்வ சாத்திர சம்மதமாகிய உண்மை.

"எல்லாமுன் உடைமையே எல்லாமுன் அடிமையே
எல்லா முன்னுடைய செயலே"

என்பது பெரியோர் வாக்கு. இங்கே சுவாமிகள் சிவபெருமானுடைய அடிமைகளில் ஒருவனாகிய அரசன் தந்த (அப்பெருமானுடையதான) சொத்துக்களை அவற்றின் உண்மைச் சொத்துக்காரராகிய பெருமானிடம் சேர்த்து அவர் சொல்லியபடி செய்தார் என்பதில் என்ன நியாய விரோதம் உண்டு?

"என்னதாக முன் நினைந்தள பொருளும்
இல்லதாகிய உடலும் யானும்

நின்னவாக நின் அருள்கொடு நினைந்தேன்:
நின்மவா! வென நின்று நின்றுருகா
மன்று தானைதன் மேலணிகலன் கள்மதுரை
மீனவன் வான்பொருள் இறையோன்
முன்னதாக வைத்திறைஞ்சினர் அறஞ்சேர்
முதல்வனூர் முகமலர்வு கொண்டிருந்தார்"

"பெருந்துறை யுறைவாரன்பு பெருந்திருவடியராகி
இருந்தவர் தம்மின்மேன்மை யெய்தினர் முகத்தைநோக்கி
திருந்திய பொருளிதெல்லாந் திருப்பணிக் கணியும்; மேலாம்
அருந்தவர்க்குதவும்; இல்லாது அலந்தவர்க்கருளும்; என்றார்"

என்று திருவாதவூர் புராணத்துட் கூறியபடியே உடைமைகளை உடையான் கட்டளைப்படி உபயோகித்தாரேயன்றி வேறில்லை. இதில் எவ்வித நியாய விரோதமோ சட்ட விரோதமோ இல்லை.

ஆனால் உலகத்திலே யாரும் இவ்வாறு ஒருவன் எந்த ஒரு காரியத்துக்காகவும் ஒப்புவித்த பொருள்களைத் திருப்பணியிலே செலவு செய்துவிடலாமா? அப்படிச் செய்தால் இந்நாள் அவனை உலகம் சும்மா விடுமா? என்று கேட்கலாம். இப்படி எல்லாரும் உலகில் செய்தல் கூடாதுதான். ஏன்? சுவாமிகள் தமது உன்னதமான மந்திரித் தொழிலையும் தமது பொருள்களையும் தமது உடம்பையும் உயிரையும் தம்மதாக எண்ணிய எண்ணத்தைத் துறந்து அவை அனைத்தையும் சிவபெருமானுடையன என்று துணிந்து அவ்விதியின் படியே அர்ப்பணமும் செய்துவிட்டனர். அவ்விதம் உலகில் யாவர் யாவர் தம்முடைமைகளையும் தம்மையும் சிவார்ப்பணமாக ஒப்புவித்துவிட்டார்களோ அவர்களுடைய நிலைதான் இங்கு நாம் பேச உள்ளதே தவிர ஏனைச் சாமானியர்களுடைய நிலையல்ல. அன்றியும் தம்மைச் சிவார்ப்பணமாக ஒப்புவித்தவர்களுக்கும் அவனுடைய ஆணைவேண்டும். அந்த நிலையிலும் அவன் ஆணையின்படியே தான் நடப்பது நியாயமாகும். ஆனால் அந்நிலையில் அவர்கட்கு அவன் செயலே செயலன்றித் தமக்கென்று வேறு ஒரு செயலுமில்லாமையின் அவர்கள் செயல்

யாவும் இறைவன் தம்செயலாகவும் கொள்வன். "அன்றியும் நமது சுவாமிகள் பூர்வத்திலே ஒரு காலத்தில் திருக்கைலாய மலைச்சாரலிலே சிவசித்தராய்த் தவஞ்செய்து கொண்டிருந்தார் என்றும் ஒருநாள் ஆகாய வீதியிலே சஞ்சரிக்கும்போது இவரிடம் இருந்த கவன குளிகை ஒன்று நழுவி பூமியிலே விழ அதை ஒரு பாண்டிய அரசன் கண்டெடுத்துக் கொண்டானாக அதை மீட்டுப் பெறுமாறு இவர் கேட்க அதற்காக அவ்வரசன் வேண்டியபடி அவரை அழைத்துச் சென்று கைலாசமலையைக் காட்டினார் என்றும் அப்போது அவ்வரசன் அவ்வெள்ளிமா மலையினது பரிசுத்த வெண்மையையும் நயத்தையும் கண்டு வியந்து தன் கைவேலினை அதிலே ஊன்ற அம்மலையின் வெள்ளி அவ்வேலிலே படர்ந்து ஒட்டிக் கொண்டு வரவே அதனோடு மீண்டும். நகர்வந்து சேர்ந்து அவ்வேலினைத் தம் பொக்கிஷத்திலே இட்டான் என்றும் அதனைத் தாம் அறியாதிருந்தார் என்றாலும் அதற்கு உடந்தையா யிருந்தமையின் இவர் உலகிலே அவதரித்து அப்பொருளை வாங்கி மீட்டும் உடையானிடம் சேர்ப்பித்தார் என்றும் ஒரு பூர்வ சரித்திர வாலாறும் புராணங்களிலே கேட்கப் பெறுகின்றமையும் இங்கே கவனிக்கற்பாலது என்று ஆசிரியர் க. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தமது "ஸ்ரீமாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை" என்ற நூலில் எழுதியுள்ளார்கள்.

எனவே உலகிறந்து நின்று சிவபோதத்தால் நிகழ்ந்த செயல்களை உலகியல் நீதிகளாலும் விதிகளாலும் வைத்து ஆராயத்தகாது என்பது பெற்றோம். அவ்வாறு பார்த்து இடர்ப்பட்டு மயங்கிச் சுவாமிகளிடம் பழிகூறி அபசாரப் படுவோர் பலராயினர். ஏன்? இவர்கள் மட்டுமோ? அரிமர்த்தன பாண்டியரும் இறைவன் "அருளே கண்ணாக"க்காட்ட உண்மை காண்பதற்கு முன்னாலே சுவாமிகள் செயலை உலகியல் விதியிலே வைத்துப் பார்த்து அவரைத் தண்டம் செய்தார் அன்றோ? கண்ணுதலார் காட்டாக் கால் காண்பாருமுண்டோ? ஆதலின் இவ்வாறு உண்மை யறியாது சிற்றறிவினாலே சிற்றாராய்ச்சி சூழலிட் சிக்கி மயங்கி அபசாரப்படும் சிற்றுயிர்களுக்கு நாம் இரங்கி இவர்கள் பால் அருள்

செய்து உண்மைகாட்டி இவர்களை ஈடேற்றுமாறு இறைவனை வேண்டுவோமாக!

மணிவாசகப் பெருமான் மலரடிகள் வாழ்க!!!

தீக்கை.

(திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி., ஏ.,)

(முன் ௩௪௪-ம் பக்கத் தொடர்ச்சி)

23 மேலே சகலர்க்குக் கூறிய தீக்கை வகைகளெல்லாம சமய தீக்கை விசேட தீக்கை நிருவாண தீக்கை என்னும்மூன்று தீக்கைகளில் அடங்கும். நிருவாண தீக்கைக்கும் ஆசாரிய பிடேகத்துக்கும் முறையே பிறர்க்குத் தீக்கைகளும் பிறசைவக் கிரியைகளும் செய்யும் அதிகாரமின்மை அதிகார முண்மைகளி லன்றி வேறு வேறுபாடு ஒன்றுமில்லை. இரண்டிற்கும் ஞான முறைமை ஒன்றே.

24. தீக்கையானது தகுதியில்லாதவருக்குச் செய்தலும் தகுதியுடையவருக்குச் செய்யாதிருத்தலும் ஆசாரியனுக்குக் குற்றமாம். தகுதியில்லாதவர்க்குச் செய்யுந் தீக்கையாற் பயன் உண்டாகாது. தகுதி யுடையாருக்கு அவர்கள் விரும்பிய பொழுது தீக்கை செய்யப்படாவிட்டால் அவர்கள் தீக்கைப் பேற்றினல் அடையக்கூடும் பயனை இழப்பார்கள்.

25. சமய தீக்கையானது ஒருவனைச் சைவ சமய எல்லைக் குட் புகும்படி செய்கிறது. சமயம் புகச்செய்யும் தீக்கையாத லின் அது சமய தீக்கை என்றும் பெயர்கொண்டது. சைவ சமயத்திற்கே சிறப்பாக உரிய சரியை கிரியை, யோக ஞானம் என்னும் நான்கு நெறிகளில் சரியை நெறியைச் சார்ந்தது சமய தீக்கையாகும். தீக்கையை அவன் ஆசாரியபிடேகம் பெற்ற ஒரு

தக்க ஆசாரியனிடம் சமயம் பெறுகின்றான். சமய தீக்கையைப் பெற்றவன் சைவ ஒழுக்கத்துக்கு உரியவனாகின்றான்.

26. ஒருவன் முன்னே பல பிறவிகளில் புறச்சமயங்களில் நின்றொழுகியும் அச்சமயங்களில் நின்றொழுகியும் மிருதி நூல் வழியொழுகியும் ஆச்சிரமத் துறைகளில் நின்று தவம் புரிந்தும் வேதங்கள் பல கலைகள் சிறப்புடைய புராணங்கள் ஓதியுணர்ந்தும் இறைவனது பொது இலக்கணங்களைத் தெரிந்தால் அவன் சைவ சமயம் புகுந்து சரியை நெறியை அடைதற்குத் தகுதியுடையவனாகின்றான். சைவ சமயம் புகுதற்கு முன் ஒருவன் ஒழுகும் நெறி உலகநெறி என்று கூறப்படும். இந்த நெறியில் இறைவன் தனது அருட்சக்தியை மறைத்து மக்களுயிர்களைப் பற்றி நிற்கிற ஆணவமாக முன்வழி நின்று அவர்கள் தங்கள் வலியாலே எல்லாக் கருமங்களையுஞ் செய்கிறதாக நினைத்துச் செய்கிற வினைகளது பலனாக அவர்களுக்கு உலகபோகங்களை எல்லாம் ஊட்டி நுகர்வித்து அப்போகங்கள் நிலையான இன்பம் தருவன அல்ல என்னும் உணர்ச்சியை அவர்களது உள்ளத்திற் பதியும்படி செய்கின்றான். உலக போகங்களில் உவர்ப்பு அடைந்த உள்ளத்தை யுடைய மக்களே உண்மைச் சரியை நெறியை அடைகின்றார்கள்.

27. சரியை நெறியில் ஒருவன் ஒரு ஆசாரியனிடம் சமய தீக்கையைப் பெற்று தனது தகுதிக் கேற்ப இறைவனைப் புறத் திருமேனியில் வழிபடுகின்றான். அவ்வழிபாட்டுக்கு உரிய தொண்டுகளையும் அவன் யாதொரு பயனுங் குறியாது இறைவனது அருள்வழியில் நின்று செய்கின்றான். அத்தொண்டுகள் திருக்கோயிலில் திரு அலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருநந்தனவனம் வைத்தல், பூக்கொய்து தொடுத்து மாலைசாத்துதல், நறும்புகையிடுதல், திருவிளக்கேற்றுதல், பன்னிரு திருமுறைப் பாக்கள் ஓதல், சிவனடியார்களுக்கு அவர்கள் உவந்த தொண்டு செய்தல் முதலியன,

28. சரியை நெறியில் வழுவாது ஒருவன் சிலகாலம் ஒழுகி முன்னையினும் நுணுகிய அறிவு உடையவனாகின்றான். அதனால்

அவன் ஏறக்குறைய காற்பங்கு உண்மை அறிவை அடைகின்ருன். அவனிடத்து உள்ள மலங்களினது வலியும் காற்பங்கு அவனை விட்டு நீங்குகின்றது.

29. பின்னர் அவன் கிரியை நெறியிற் சென்று தக்க ஆசாரியனிடம் விசேட தீக்கையைப் பெறுகின்ருன். அது சமய தீக்கையினுஞ் சிறப்பு உடையதாகலின் விசேட தீக்கை எனப்பட்டது. இத்தீக்கையில் ஆசாரியன் ஒரு ஓமகுண்டத்தில் வாகீஸ்வரனையும் வாகீஸ்வரியையும் ஆவாகித்து அவன் ஆன்மாவை வாங்கி வாகீஸ்வரனல் வாகீஸ்வரி கருப்ப நாடியிற் செலுத்திக் கருப்பாதானம் முதலிய கிரியைகளை மும்மூன்று ஆகுதியின் நிரப்பிக் கருமுதிர்ந்து பபந்ததாகப் பாவித்துக் குண்டத்தினின்றும் ஆன்மாவை மீளவாங்கி அவனுடைய இருதயத்தில் தாபித்து சிவனுடைய மகனுகச் செய்கின்ருன். விசேட தீக்கை பெற்றவன் சிவபூசைக்கும் யோகநெறிக்கும் சிவாகமம் ஓதுதற்கும் உரியவனுகின்ருன். இத்தீக்கையால் அவன் கிரியை நெறியில் அரைப்பங்கு உண்மை அறிவை அடைந்து அரைப்பங்கு மலவலியினின்று நீங்குகின்ருன். யோகநெறியில் முக்காற்பங்கு உண்மை அறிவை அடைந்து முக்காற் பங்கு மலவலியி னின்று நீங்குகின்ருன்.

30. கிரியையாளன் சிவலிங்கப் பெருமானைப் பூதசுத்தி ஆன்மசுத்தி தத்துவசுத்தி மந்திரசுத்தி இலிங்கசுத்தி என்னும் ஐந்து சுத்திகளையுஞ் செய்து அகவழிபாடு (அந்தரியாகபூசை) செய்து புறத்திலும் எரிவினை செய்து நறுமணப்புகை திருவிளக்கு தூயநீர் பூ முதலிய வழிபாட்டுப் பொருள்களைக் கொண்டு வழிபடுகின்ருன். அவன் இவ்வாறு தனது தகுதிக்கேற்ப சிவலிங்கப் பெருமானை அகத்திலும் புறத்திலும் அருவுருவத் திருமேனியில் வழிபடுகின்ருன். அகவழிபாடாவது இருதயத் தானத்தில் முப்பத்தாறு தத்துவங்களுக்கு மேலே ஆன்மா இருக்கிறதாகவும் அந்த ஆன்மவெளியினுள்ளே அருட் சத்தியும் அருட் சத்தியினுள்ளே சத்திமானுகிய சிவமும் இருக்கிறதாகப் பாவித்து வழிபடுதல் அகவழிபாடில்லாத புறவழிபாடு பயன் தராது.

31. கிரியையாளன் யோகம் செய்தற்கும் உரியவனாகின்றான். யோகத்தினால் அவன் தனது மனதை உலக விடயங்களிற் செல்லாத படி நிறுத்தி சிவபெருமானைத் தியானித்து தியானத்தின் பயனாகத் தியானிப்போனாகிய தானும் தியானமும் தோன்றாது தியானப் பொருளாகிய சிவம் ஒன்றே விளங்கப் பெறுகின்றான். தியானம் (Contemplation) என்பது தியானிக்கும் பொருளையே மனதில் அமைத்து நிறுத்தி அதனாலே ஜீவனென்றுந் தோன்றாமல் விழுங்கப்பட்டு அதன் மயமாய்ப் போதல். தியானம் அன்றி யோகத்துக்குப் பிராணாயாமமும் தாரணையும் முக்கிய உறுப்புக்களாம். பிராணாயாமம் என்பது பிராண வாயுவை அடக்குதல். தாரணை (Concentration) என்பது மனதை வெளி விடயங்களிற் செல்லாதவண்ணம் தடுத்து தியானப் பொருளில் நிறுத்துதல். அவன் பிராணாயாமம் தாரணை தியானம் மூன்றினாலும் மூலாதாரத்திலிருந்து எழுகின்ற இடைகலை பிங்கலை என்னும் இருபக்க நாடிகளை அடைத்து சுழுமுனையாகிய நடுநாடியைத் திறந்து பிராண வாயுவை அதன் வழியாய்ப் பிரமாந்தரம் வரை செலுத்தி சந்திரமண்டலத்திலுள்ள அமிர்தத்தைச் சுழுமுனை நாடி வழியாய்ப் புருவம் நடுவிலும் அதற்குக் கீழும் ஒழுகும்படி செய்து சுழுமுனை நாடியிலிருந்து பிரிகின்ற பல நாடித் துவாரங்களின் வழியாய் உடல் முழுவதும் தேக்கி அந்த அமிர்தத்தை யுண்டு இன்பம் அடைகின்றான்.

32. மேலே சொன்ன சரியை கிரியை யோகநெறிகள் மூன்றும் நான்காவது நெறியாகிய ஞானத்துக்கு உறுப்புக்களாயுள்ளன. சரியை கிரியை யோகங்கள் முறைமையினாலன்றி ஒருவனுக்கு உண்மை ஞானம் வராது. சரியை கிரியை யோகம் மூன்றும் ஒரு மரத்தினது அரும்பு மலர் காய்போலும்; ஞானமானது அக்காயிலிருந்து உண்டான கனிபோலும் உள்ளன. இவ்வாறு அடைகிற உண்மை ஞானத்தினால் அன்றி வீடு அடைதல் கூடாது. இந்தச் சரியை கிரியை யோகநெறிகளில் ஒருவன் ஞான நூல்களை ஓதியும் ஓதுவித்தும் கேட்டும் கேட்பித்தும் சிந்தித்தும் பதிபசு பாசப் பொருள்களின் இலக்கணங்களையும், பசுவுக்குப் பதியை அடையும் உரிமையையும், பாசத்தை நீக்கும் முறைமையினையும், பதிபசுவு

க்கு இடையீடின்றிச் செய்து வரும் உபகாரங்களையும், பதிக்கும் பசுவுக்குமுள்ள ஆண்டான் அடிமைத் தொடர்பினையும், பிற சித்தாந்த உண்மைகளையும் அறிகின்றான். சமய ஞானத்தினாலும் ஒழுக்கத்தினாலும் அவனிடம் அருட்சத்தி பதிந்து சத்திநிபாதம் பெறுகின்றான். அவன் சரியையில் மந்ததர சத்திநிபாதத்தையும் கிரியையில் மந்தசத்திநிபாதத்தையும் யோகத்தில் தீவிரசத்திநிபாதத்தையும் அடைகின்றான். சத்தி பதிந்த அளவு அவனிடமிருந்த மலவலியும் அவனை விட்டு நீங்குகின்றது. அவன் மேலே கூறியபடி சரியையில் காற்பங்கு மலவலியும் கிரியையில் அரைப் பங்கு மலவலியும் யோகத்தில் முக்காற்பங்கு மலவலியும் தன்னை விட்டு நீங்கப் பெறுகின்றான்.

33. இந்தப்பருவம் அவன் அடைந்தபொழுது சிவபெருமானே ஒரு மானிட குருவடிவாய் வந்து அவனுக்கு நிருவாண தீக்கை செய்து ஞான நூற்பொருள்களை ஐயந்திரிபு அற வுணர்த்துகின்றான். நிருவாணம் என்பது உடையின்மை அதாவது ஆறு அத்துவாக்களையுங் கடந்த தன்மை. அது குருவானவன் மாணாக்கனுடைய ஆறு அத்துவாக்களையும் சோதித்து பந்தம் நீக்கி அவனுடைய ஆன்மாவைத் திருவடியிலே கூட்டுவிக்கும் தீக்கையாதலால் நிருவாண தீக்கை எனப் பெயர்பெற்றது. இந்தத்தீக்கையில் அவனுக்குக் குரு அத்துவ சுத்திசெய்கின்றார். அத்துவசுத்தியாவது குருவானவர் மாணாக்கனுடைய ஆறு அத்துவாக்களையுஞ் சோதனைசெய்து அவைகளினாலே கட்டுண்டு கிடக்கிற சஞ்சிதவினைகளையெல்லாம் தமது ஞானத்தால் அறிந்து அவைகளை ஒரேகாலத்தில் நெருப்புமுன் பஞ்சுபோல ஞானபாவனையால் கெட்டுப்போம்படி செய்தல். குருவினிடம் கேட்டுணர்ந்த உண்மை ஞானத்தினால் மாணாக்கனுக்கு விருப்பு வெறுப்பு இன்மையால் ஆகாமிய வினை ஏறுவதில்லை. பிராரத்த வினையானது உடல் உழையாயிருந்து உடல் நீங்கும்பொழுது கழியும். நிருவாண தீக்கை சத்தியோ நிருவாண தீக்கை எனவும் அசத்தியோ நிருவாணதீக்கை எனவும் இருவகைப்படும். சத்தியோ நிருவாண தீக்கை பெற்றோர் தீக்கையைப் பெற்றபொழுதே உடலினின்று நீங்கி வீட்டினைப்பெறுவர்.

அசத்தியோ நிருவாணதீக்கை பெற்றோர் தீக்கையிற் சஞ்சிதவி னையும் ஆகாமியவினையும் ஞானகுருவினுற் சோதிக்கப்பெற்று உடல் நிற்பதற்கேதுவாய் அநுபவிக்கப்படும் பிராரத்தகன்மம் சோதிக்கப்படாமையால் ஆயுள் முடிவில் வீட்டினைப்பெறுவர்.

35. நிருவாண தீக்கை செய்யப்பெற்றவன் ஞானகுருவினி டம் ஞானநூற்பொருள்களைக் கேட்கவும் அந்தக் கேட்டலாகிய உண்மை ஞானத்தினுல் அவனது உள்ளத்திலே முதல்வனுகிய பதியும் அப்பதியினுள்ளே பசுவும் அப்பசுவினுள்ளே பாசமும் நிருவிகற்பமாய் அநுபவத்தில் விளங்கித் தோன்றும். பதியான வன் ஆன்மாவின் உடலில் உயிர்க்கு உயிராய் நிற்கின்ற நிலையும் உலகில் யாண்டும் நிறைந்து நிற்கின்ற பரிபூரண நிலையும் அவனு க்கு நிருவிகற்பமாய் விளங்கித் தோன்றும்.

36. மேலே சொல்லியவாறு கேட்டல் ஞானத்தின் பயனை அடைந்த மாணக்கன் ஞானகுருவினிடம் கேட்ட ஞானநூற்பொ ருள்களைக் கருத்தொருங்கித் தனது சிந்தையிற் சிந்திக்கின்றுன். இங்கே சிந்தித்தல் என்பது கேட்ட ஞான உண்மைகளை யோ கக்காட்சியினுல் உள்ளுணர்வு அநுபூதியிற் காண்டல். நிருவாண தீக்கைப் பேற்றிற்குமுன் அவன் தனது சிந்தையில் கருத்து மாத் திரம் விளங்கும்படி சிந்தித்தல்போல் அல்ல, இந்தச் சிந்தித்தல் இவ்வாறு அவன் எப்பொழுதும் ஞான உண்மைகளைச் சிந்தித்தற் கண் மிக்க வேட்கையுடையவனுயிருத்தலின் ஞான குருவினிடத் திற் கேட்ட உண்மைகள் எல்லாம் அவனுக்குத் தனது அநுபவத் தின் உறைப்பினுலே நிருவிகற்பக் காட்சியைக் கடந்தும் சவிகற்ப க்காட்சியை முற்றும் பெறுமலும் இரண்டு காட்சிகளுக்கும் இடையிலுள்ள காட்சி நிலையை அடைவன். அவனுக்குக்கேட்டல் அறிவு முறுகி வளர்ந்து அதனுல் அவன் நாலாவது சத்திநிபாத மாகிய தீவிரதர பக்குவத்தை அடைதலும் கூடும். அப்பொழுது அவன் சிவப்பொருளை உலகில் எங்கும் கலந்து நிற்கும் அபேதத் தன்மையைக் கண்டு உலகப்பொருள்களில் விருப்பு வெறுப்பு இல் லாதவனுய் அப்பொருளோடு இரண்டறக் கலந்து சிவத்தோற்றம் ஒன்றுமே கண்டு கொண்டிருப்பன்.

37. பின் அவன் தெளிவு ஞானத்தினுல் சிவப்பொருளைப் பொருட்டன்மைபற்றிப் பேதமாயும் கலப்புத் தன்மைபற்றி அபேதமாயுங் காண்குதலின்றி எல்லாப் பொருள்களிலும் ஒற்றித்து நின்று ஒன்றிலும் பற்றில்லாத நிராதாரப் பொருளாய் சவிகற்பக் காட்சியினுல் தனது உள்ளுணர்வு அநுபவத்தில் காண்கின்றுன். தெளிவு ஞானத்தினுல் அவன் ஐயக்காட்சியும் திரிபுக்காட்சியும் முற்றிலுமில்லாத துணிவு அறிவை (நிச்சய ஞானம்) அடைகின்றுன்.

38. பின்னர் அவன் தெளிந்த ஞானத்தின்வழியே நிட்டைபுரிகின்றுன். கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து துணிந்த பொருளில் பிரிவின்றி உறுதியாக நிற்றலே நிட்டையாகும். நிட்டைஞானத்தினுலே அவன் இன்பதுன்பங்களுக்குக் காரணமாகிய புண்ணியபவங்களிரண்டினையும் அறுத்து பூமி சுவர்க்க நாகலோகங்களிற் செல்லுஞ் செலவு ஒழிந்தவனுகி இம்மையிலே நின்மல சாக்கிராதீத நிலை அடையப்பெற்று ஒருவாற்ருனுங் குறைவின்மையை அடைந்து சீவன் முத்தராகி இறைவனுடைய வியாபக அறிவுடன் இரண்டறக்கலந்து அவன் திருவடி நிழலில் பேரின்பம் நுகர்ந்து கொண்டிருப்பன்.

39. மேலே கூறியவாற்ருல் சைவசமயமானது சிறப்பாக இறைவனுடைய அருளை அடைதற்கு வழிகாட்டியாயுள்ளது என்பதும், அதிற் கூறப்படுந் தீக்கைகள் ஒருவனை அவன் நற்கருத்துக்கும் நன்முயற்சிக்கும் ஏற்றவாறு உண்மை அறிவை அடையச் செய்தற்குச் சாதனமாயுள்ளன என்பதும், அவ்வுண்மை அறிவு நிரம்பப்பெற்றவன் இம்மையிலே வீட்டின்ப நிலையை அடைவன் என்பதும் நன்கு புலனுகும். இதனுல் சிவாகமங்களும் சித்தியார் முதலிய ஞானநூல்களும் கூறுகிற சமயதீக்கையைப் பெற்றுச் சரியை நெறியில் ஒழுகும் உண்மைச் சைவர்களுங்கூட தீக்கை பெருமல் உபநயனச் சடங்குமாத்திரம் செய்யப்பெற்று வேதம் ஓதியும் மிருதிகளின்வழி ஒழுகியும் பதிபசுபாச இலக்கணங்களை அறியாது "யாங்களே கடவுள்" என்று கூறும் ஏகான்மவாதக்கொள்கையைக் கொண்டும் உள்ள உண்மைப் பார்ப்பனர்

களைவிட மேலானவர்கள் என்பது பெறப்படுகின்றது. ஏனைய பார்ப்பனர்கள் சைவர்களுக்கு மேலானவர்கள் ஆகார் என்பது கூற வேண்டுதலின்று. தீக்ஷையினால் அன்றி மலத்தன்மை நீங்கி சிவத்தன்மை உண்டாகாது. இக்காலத்தில் சைவதீக்ஷை பெறாத ஏகான்மவாதப் பார்ப்பனப் புரோகிதர்கள் சைவர்களுக்குப் பொருள் விளக்கமில்லாமற் செய்யும் நித்திய நைமித்திக காமியச் சைவக்கிரியைகள் யாதொரு பயனையும் அளிக்கா. இதனை அறிந்து சைவர்கள் ஒழுகுவார்களாக.

மணவினை மறைமொழி

[திரு. அ. நடராஜபிள்ளையவர்கள்]

செந்தமிழ்ச் செல்வர்காள்!

நந்தென்னாடெங்கும் தமிழ் மணமுறை மேற்றிசை மதி போல் விளங்கி வருவது யாவரும் அறிந்ததே. அவ்வமயம் தேவார திருவாசகங்களாகிய தமிழ்மறை மட்டும் ஓதப்பட்டு வருவதாலும், மணமக்களுக்கு மனைவியின் கருத்தும் பொருளும் கடமையும் விளங்கச் செய்யவேண்டுவது இன்றியமையாதவற் றுள் ஒன்றுமாகலானும் கீழ்க்காணும் மறைமொழிகளையும் யித் தமிழ் மறைக்குப் பின் மணவினைச் சடங்கின்போது சேர்த்துக் கொள்ளல் நல்மாமென் றுன்னி வெளியிடலானேன்—

மணமகனை நோக்கிக் கூறல்—

திருமக ளுறையுளாத் திகழ்ந்திடு மாண்டகாய்!
கருவினி லுற்றிடுங் கடமையா மன்பினைப்
பெறலே மக்கட் பெரும்பய னாகலின்,
"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை," என்ற
மறைமொழி நேர்மையை மனத்தினி லுன்னி
கறையொழி நெஞ்சொடு கட்டிய வாணுள்
உளவரை நேயமார் ஒழுக்கம் பூண்டு

பிழைவழி விட்டுப் பெரிதாம் அறவழி
பாரினி னின்று பலர்க்கு முதவியாய்
நேரினி னிறுத்த நிமலனு ரனுப்பிய
அன்பெனத் தோன்றி யார்வமாய் மலர்ந்து
தனதுதாய் தந்தை தம்மினம் விடுத்து
னைதுவாழ் வுக்கு நேர்ந்திடு துணையாய்
உன்னையே பற்றென வுற்றிவிம் மங்கையை
அன்புட னேற்றுநீர் நன்றினுந் தீதினும்
இன்பமே நுகர்ந்துநீர் என்றும் பிரியா(து)
அன்புடை மக்களை யவனியிற் பெற்று
மன்பதை யுலகில் வழிவழி பெருகி
நிலமிசை நீடூழி நின்றுநிலை பெருகவே.

மணமகளை நோக்கிக் கூறல்—

வெண்டா மரையொடு செந்தா மரைவாழ்
கலைமக ளலைமகள் கவின்மிகு நங்காய் !
உன்றனைப் பெற்றோ ருறுதவங் கிடந்து
கன்றினை விரும்புங் கற்று வெனவே
வல்லா னருளா னல்லா, ருக
மல்லன்மா வுலகின் மெல்லிய லுன்னைப்
பெற்றே யன்புடன் பெயரிட்டுத் தேனீ
தேனினைத் திரட்டிய செயல்போ லுளொரு
மேனியாய் வளர்த்து வெகுவித வாடை
யணி முதற்கல்வி யனைத்து மளித்தே
யணிதிகழ் முத்தினை யாழ்கடன் மூழ்கித்
தொக்கோர்க் களிக்குஞ் சூழ்ச்சிய தென்ன
தக்கதோர் கொழுநனைத் தரையினிற் றேர்ந்தே
யிந்நா ளவனிட முன்னையேற் பிப்பதான்
மதியுடை யாய்நீ மனைத்தக்க மாண்பைத்
துதிசெயக் கைக்கொடு தொழுதகு கொண்டான்
வளத்துக்குத் தக்க வாறின் னடத்தி
விளக்கமாங் கற்பை மிகுமனத் திருத்தி

யென்னா ளுங்கொண் டானைப் பேணி
முன்னாள் வாசுகி வள்ளுவர் மானு
யவனுடன் கூடி யறிவும் பண்பும்
அவனியிற் செறிந்த வன்புடை மக்களைப்
பெற்று மனைக்குப் பேரிற் கிழத்தியாய்
உற்று வழிவழி யோங்கிச் சிறக்கவே.

மணமக்களை நோக்கிக் கூறல்—

எதிர்கால வுலகை யிலங்கிடச் செய்யும்
மதிமிகு நேர்மை மணமார் மக்களே!
நீவி ரிருவரும் நீண்டவிவ் வுலகிற்
பூவும் மணமும் பொழிலும் நிழலும்
நகமுஞ் சதையும் நறவமு மினிமையும்
பகலும் பரிதியும் போலப் பாரில்
ஒன்று யிணைந்தே யுயர்வா மருள்வழி
நன்றே யடைந்து நானில மதனிற்
றிருமக டனது மருமக ளோடும்
பொருந்திட வில்லினைப் புகழாய் நடத்தி
உடலு முயிரும் போல நேர்மையாய்
நீரும் பாலும் போல நெருங்கி
மணியு மொளியும் போலமா நிலத்திற்
பணிவொடு நேர்மை பதிந்தநெஞ் சத்துக்
கற்பகம் போல காசினிக் குழைத்தே
அற்பக நிறைந்த வாண்பெண் பலவாம்
மக்களைத் தந்து மாநிலம் பெருக
பற்பல் லாண்டு பாரினில் வாழ்கவே.

தமிழ்ப்புலமை

[யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரவர்கள் இராம நாதபுரம் பொன்னுச் சாமித்தேவரவர்கள் உதவிபெற்றுத் திருக்கோவையாருரை முதற்பதிப்பு வெளியிட்ட காலத்தில் (ரௌத்திரி ஐப்பசி கி. பி. 1860) தம்பதிப்பிற்கு அநுபந்தமாகத் 'தமிழ்ப்புலமை" யென்னுந் தலைப்போடு தமிழ் நூல்கள் கற்கு மொழுங்கினை எழுதிப் பதிப்பித்தனர். எக்காரணத்தாலோ பிற்காலத்து வெளிவந்த பதிப்புக்களில் அது விடப்பட்டது. தமிழ்ப்புலமையைப்பற்றி நாவலரவர்கள் கொள்கையை யறிதற்கு அஃதேதுவாயிருத்தலால் இங்கு அதனைப் பதிப்பிக்கிறோம். அதனைச் சார அவர்கள் பதிப்பித்திருந்த "தமிழ்ப் புத்தகங்கள்" என்னும் குறிப்பையும் சேர்க்கின்றோம்.]

க. தமிழ் கற்கப் புகுஞ் சைவசமயிகள் முன்னர்ப் பாலபாடங்களைப் படித்துக்கொண்டு, இலக்கணச் சுருக்கத்தைக் கற்றறிந்து, இயன்ற அளவு பிழையில்லாமல் எழுதவும் பேசவும் பழகுக.

உ. நிகண்டு கற்று, அதனுள் அடங்கிய சொற்களையும் அவைகளின் பொருள்களையும் அறிந்துகொள்க.

ந. திருவள்ளுவர் குறள், நாலடியார் முதலாகிய நீதி நூல்களைப் பதப்பொருளுடனே கற்றறிந்து கொள்க.

ச. சமயதீக்ஷை பெற்றுக்கொண்டு, சைவர்களுக்கு இன்றியமையாச் சிறப்பினவாகிய தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் அருட்பாக்களைப் பண்ணுடன் ஓதவும், சுத்தாங்கமாக ஓதவும் பழகிக்கொள்க.

ரு. பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணம், உபதேசகாண்டம், கோயிற்புராணம், காசிகண்டம், கூர்மபுராணம், சேதுபுராணம், காஞ்சிப்புராணம், திருத்தணிகைப் புராணம், பதினோராந்திருமுறையிற் பிரபந்தங்கள், குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த பிரபந்தங்கள் முதலாகிய இலக்கியங்களை ஆராய்ந்தறிக.

சு. நன்னூல் விருத்தியுரை, அகப்பொருள் விளக்கவுரை, புறப்பொருள் வெண்பாமாலையுரை, காரிகையுரை, வெண்பாப்

பாட்டியலுரை, தண்டியலங்காரவுரை என்னும் இலக்கணங் களைக் கற்றறிந்து, தாம் கற்ற இலக்கியங்களில் இவ்விலக்கண விதிகளை அமைத்துப் பழகுக.

எ. இன்னும், காலம் உளதாயின், தொல்காப்பியம் இளம் பூரணருரை, சேனாவரையருரை, நச்சினார்க்கினியருரை, பிர யோகவிவேகவுரை, இலக்கணக்கொத்துரை, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இறையனாரகப்பொருளுரை என்னும் இலக் கணங்களையும் கற்றறிக.

அ. பூகோளநூல், ககோளநூல், அங்ககணிதம், வீசகணி தம், க்ஷேத்திரகணிதம் என்னும் நூல்களைக் கற்றறிக.

கூ. தருக்கநூல்களைக் கற்றறிந்து, எடுத்தவிடயத்தை நியாயம் வழுவாமல் எழுதவும் பேசவும் பழகுக.

௰. திருவள்ளுவர் குறள், பரிமேலழகருரை, திருச்சிற் றம்பலக்கோவையார் நச்சினார்க்கினியருரை, கல்லாட நச்சினார்க் கினியருரை என்பனவற்றைக் கற்று, இடைவிடாது பலகாலும் உளங்கொளப் பயிலுக.

கச. விசேஷதீக்ஷை பெற்றுக்கொண்டு, சைவசமயநெறி யுரை, சிவதருமோத்தரவுரை, பரமததிமிரபானு, சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் முதலாகிய சமயநூல்களைக் கற்றறிக.

௰உ. கல்விக்குப் பயன் அறிவும் அறிவுக்குப் பயன் ஒழுக்கமுமாம். ஆதலால் தம் வாழ்நாள் முழுதும், சிவநிந்தை, குருநிந்தை, சிவனடியார் நிந்தை, வேதாகம நிந்தை, சிவத்திர வியங் கவர்தல், கொலை, களவு, புலாலுணல், கள்ளருந்தல், பிறர் மனை விழைதல், வரைவின் மகளிர் விழைதல், பொய், அழுக் காறு, புறங்கூறல், செய்ந்நன்றி மறத்தல் முதலாகிய பாவங்களை ஒழித்து, சிவத்தியானம், சந்தியாவந்தனம், பஞ்சாக்ஷரசெபம், சிவபூசை, தமிழ்வேதபாராயணம், சிவாலயசேவை, மகேசுர பூசை, தீக்ஷாகுரு வித்தியாகுரு, தந்தை தாய் தமையன் முத லிய பெரியோர்களை வழிபடுதல், இரக்கம், பொறை, அடக்கம் முதலாகிய புண்ணியங்களை உடையராய் ஒழுகுக

௰௩. இருமை யின்பத்துக்கும் துணைக்காரணமாகிய பொருளை, பிறவுயிர்களுக்குச் சிறிதாயினும் கேடு பயவாத நல் வழியாலே ஈட்டுக.

௰௪. நித்திய கருமத்துக்கும் பொருளீட்டுதலுக்கும் உரியகாலம் அல்லாத மற்றக் காலமெல்லாம், சிறிதும் வீண் படாமல், புண்ணிய நூல்களை ஆராய்தலினும், நன்மாணாக்கர் களுக்குக் கல்வி கற்பித்தலினும், பலருக்குப் பயன்படும் நூல் களையேனும் உரைகளையேனும் செய்தலினும், போக்குக.

௰௫. இவ்வாறே கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்து விளங்கும் பரிபக்குவர்கள் சற்குருவை அடைந்து, நிருவாண தீக்ஷை பெற்றுக்கொண்டு, ஞானசாத்திரங்களாகிய (க) திரு வுந்தியார், (உ) திருக்களிற்றுப்படியார், (௩) சிவஞானபோதம், (௪) சிவஞானசித்தியார், (௫) இருபாவிருபது, (௬) உண்மை விளக்கம், (எ) சிவப்பிரகாசம், (அ) திருவருட்பயன், (௯) வினா வெண்பா, (௰) போற்றிப்பஃறொடை, (௰க) கொடிக்கவி, (௰உ) நெஞ்சுவிடுதூது, (௰௩) உண்மைநெறிவிளக்கம், (௰௪) சங் கற்ப நிராகரணம் என்னும் சைவசித்தாந்த நூல்களை உரையுட னே விதிப்படி சிரத்தையோடுங் கற்றறிந்துகொண்டு, இச்சாத் திரங்களின் அனுபவப்பயனுய் உள்ள தோத்திரவடிவாகிய மேற்கூறப்பட்ட தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் அருட்பாக்களின் உண்மைப் பொருளைச் சிவனது திருவருள் காட்டக்கண்டு, நின் றும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும் நெஞ்சநெக் குருக, கண்ணீர்வார, மெய்ம்மயிர் சிலிர்ப்ப, சிறிதும் மறவாது அச்சிவனது திருவடிக்கீழ்த் தூங்கும் உண்மை நிலையைப் பெற்று வாழ்க.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின் *
நிற்க வதற்குத் தக." *

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன் *
நற்றாள் தொழாஅ ரெனின்." *

"நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினை *
என்றுஞ் சிவன்றா ளிணை." *

குறிப்பு:—வைணவ சமயிகள் மேற்கூறப்பட்டவற்றுள் சமய நூல்களொழித்து ஒழிந்தனவற்றையும் தங்கள் சமய சித்தாந்தங்களையும் கற்றறிந்து, அவைகளின் விதிப்படி ஒழுகுக.

தமிழ் கற்றவர்களை நடுவு நிலைமையின் வழுவாது பரீக்ஷை செய்து, அதில் வல்லவர்களென நன்கு மதிக்கப்பட்டவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ற பெயரும் சின்னமும் கொடுக்கும் சபையார் இக்காலத்தில் இல்லாமையால், தமிழ்க்கல்வியில் வல்லவர்களும் வல்லவர்களல்லாதவர்களும் ஒப்ப மதிக்கப்படுகிறார்கள். அதனால், நமது தேசத்தாருக்குத் தமிழ்க்கல்வியில் விருப்பமும் முயற்சியும் சிறிதாயினும் இலவாயின. பண்டுதொட்டுக் கல்வியிற் சிறப்புற்று விளங்கும் மகிமை பொருந்திய மடாதிபதிகள் பெருங்கருணை கூர்ந்து, காலந்தோறும், தமிழ்க் கற்றவர்களுள் தங்கள் சந்நிதானத்துக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டவர்களைப் பரீக்ஷைசெய்து, வல்லவர்களென நன்கு மதிக்கப்பட்டவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ற பெயரும் சின்னமும் கொடுத்தருளுவார்களாயின், எம்மொழியினும் இனிய நமது தமிழ்மொழி மிக வளர்ந்தோங்குமே. ஏழை சொல் அம்பலத்துக் கேறுமா !!! ஐயையோ ! இதற்கு யாது செய்யலாம்.

தமிழ்ப் புத்தகங்கள்

க. முற்காலத்தில் உள்ள மகிமைபொருந்திய புலவர்களாலே தமிழிற் செய்யப்பட்ட நூல்களுள்ளும் உரைகளுள்ளும் அளவில்லாதவைகள், அச்சிற் பதிப்பிக்கும் வழக்கம் இல்லாமையால், இறந்துபோயின. இறவாது இக்காலத்தில் எஞ்சியிருப்பவைகளும் கையெழுத்துப் பிரதிகளிலே எழுத்தும் சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு பிழைபட்டனவாய், சில விடங்களின் மாத்திரம் அருகி வழங்குகின்றன. அவைகளுள் யாதாயினும் ஒன்றைக் கற்க விரும்புவோர் அஃது இருக்கும் இடம் ஆராய்ந்தறிதல் அரிது. அறிந்தாலும், பெறுதல் அரிது. நெடுநாளாகச் செய்த பெரும் முயற்சியினாலே பெற்றாலும், எழுதவல்லார் கிடைத்தல் அரிது.

கிடைத்தாலும், எழுத்துக்கூலி மிகப் பெரிதாதலால் எழுது வித்துக்கொள்ளுதல் அரிது. எழுதுவித்துக்கொண்டாலும், ஒத்துப் பார்வையிட்டுக் கொள்ளுதல் அரிது. ஒத்துப்பார்வை யிட்டுக்கொண்டாலும், கற்கும்போது பிழையற ஓதுதலும் பொருள் துணிதலும் கூடாமையால் விளையும் வருத்தம் மிகப் பெரிது. ஒரு நூலைக் கற்றற்கே இப்படிக் காலநீட்டமும் பெரு முயற்சியும் பொருட்செலவும் வருத்தமும் உளவாமாயின், சில வாழ்நாளையும் அதற்குள்ளே பல பிணிகளையும் கவலைகளையு முடைய சிற்றறிவினராகிய மனிதர்கள் சில காலத்திலே பல நூல்களைக் கற்று வல்லராதல் எப்படி! இதனாலன்றோ, நமது தேசத்தாருக்குத் தமிழ்க் கல்வியிலே விருப்பமும் முயற்சியும் வரவரக் குன்றுகின்றன. இவ்வேதுவினால், இப்பொழுது எஞ்சி யிருக்கும் நூல்களும் விரைவின் இறந்துவிடுமென்பதற்கு ஐய மில்லை. ஆதலால், யாவருக்கும் எளிதிற் பயன்படும்பொருட்டு, முக்கியமாய் உள்ள நூல்களையும் உரைகளையும் பலவிடங்களி னின்றும் வருவிக்கப்பட்ட பல பிரதி ரூபங்களைக்கொண்டு ஒரு வாறு பரிசோதித்து அச்சிற்பதிப்பித்துப் பிரகடனஞ் செய்தல் வேண்டும்.

௨. செய்யுள் வடிவாகிய நூல்களும் அவைகளின் உரை களும் கற்று வல்லவர் சிலருக்கன்றி மற்றவர்களுக்குப் பயன் படாவாம். ஆதலால் விவேகமில்லாதவர்களுக்கும், விவேக முள்ளவர்களுள்ளும் இங்கிலிசு பாஷையைக் கற்றலினும் லௌகிகங்களைச் செய்தலினும் தங்கள் காலத்தைப் பெரும் பான்மையும் போக்குகிறவர்களுக்கும், பெண்களுக்கும் எளி திற் பயன்படும்பொருட்டு, நீதிநூல்களையும், சரித்திரங்களையும், சமய நூல்களையும், லௌகிக நூல்களையும் வெளிப்படையாகிய வசனநடையிற் செய்து, அச்சிற் பதிப்பித்துப் பிரகடனஞ் செய் தல்வேண்டும்.

கல்விப் பொருளோடு செல்வப்பொருளும் ஒருங்குடைய மகிமைபொருந்திய மடாதிபதிகளும் பிரபுக்களும் நமது தமிழ் நாட்டிலும் தமிழ்ப்பாஷையிலும் அபிமான முடையர்களாகி,

தங்கள் தங்களால் இயன்ற உதவிசெய்து, இம்முயற்சிகள் நிறைவேற்றுவார்களாயின், நமது நாட்டிலே எம்மொழியினும் இனிய நமது தமிழ்மொழி வளர்ந்தோங்குமே.

திருக்கோவையாருரை பதிப்பித்துப் பிரகடனஞ்செய்தற்கு உதவிசெய்த கல்வியறிவொழுக்கங்களானுன்ற ம-ா-ா-ஸ்ரீ பொன்னுசாமித்தேவரவர்களுடைய பெருந்தகைமையை நான் பாராட்டுதல்போலவே, அதனைக் கற்போர் யாவரும் மிக்க உவகையோடு பாராட்டுவார்களென்று நம்புகிறேன். முற்காலத்திலே பாண்டியர்களைப்போல இக்காலத்திலே இப்பிரபு அவர்கள் தமிழை வளர்ப்பார்களென்று உறுதியாகக் கருதியிருக்கின்றேன்.

சைவ எல்லப்ப நாவலர்

[திரு. S. அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் M. A., L. T.]

அருணசல புராணம்

அருணசல மாஹாத்மியம் வடமொழி **ஸ்காந்த புராணத்**திலே யுரைக்கப்பட்டதாக முன்னர்ச் சொல்லப்பட்டது. காசி வாசி செந்திநாதையர் தமது **கந்தபுராண நவநீதத்**திலே "சகல வேதாந்தசித்தாந்தங்களின் சாரத்தை உள்ளடக்கினதாய் ஐம்பது கண்டங்களாற் புனையப்பட்டதாய், ஓரிலக்கங் கிரந்தமுடையதா யிருக்கும் காந்த புராணமானது, சனற்குமார சங்கிதை, சூதசங்கிதை, பிரம சங்கிதை, விட்டுணு சங்கிதை, சங்கர சங்கிதை, சூரசங்கிதை, என ஆறு சங்கிதையுடையது. அவற்றுள் சனற்குமார சங்கிதை 55,000 கிரந்தமும், சூதசங்கிதை 6,000 கிரந்தமும், பிரம சங்கிதை 3,000 கிரந்தமும், விட்டுணு சங்கிதை, 5,000 கிரந்தமும், சங்கர சங்கிதை 30,000 கிரந்தமும், சூரசங்கிதை, 1,000 கிரந்தமும் உடையன" என்றெழுதினர். மும்பையில் அச்சிட்டு வெளிவந்துள்ள **ஸ்காந்த் மஹா புராண**மோ சங்கிதைப் பகுப்பிலதாய், மாகேசுவர, வைஷ்ணவ, பிராஹ்ம,

காசீ, அவந்திகா, நாகா, பிரபாஸ கண்டங்களென்ன ஏழு கண்டங்களுடையதாயும், 81,100 கிரந்த சங்கியை யுடையதாயும் காணப்படுகின்றது. அப்பதிப்பாளர் தம் முகவுரையில் ஆறு சங்கிதைகளையுடைய ஸ்காந்தம் உபபுராணமென்றும் இதுவே மஹா புராணமென்றும் பல நியாயங்கள் கொண்டு தாபிக்க முயன்றுளார். ஆறு சங்கிதையுடைய ஸ்காந்தத்தில் சூத சங்கிதையும் சங்கர சங்கிதையிற் சில பகுதியுமே அச்சிடப்பட்டதாகத் தெரிகிறது. இனி, அருணசல மாஹாத்மியம் ஸ்காந்த மஹா புராணத்தில் முதலாவது கண்டமாகிய மாகேசுவர கண்டத்தில் மூன்ருவது பகுதியாக உள்ளது. அது முற்பாதியென்றும் பிற்பாதி யென்றும் இரண்டு பிரிவுகளுடையது. முற்பாதியில் பதின்மூன்றத்தியாயங்களுள்ளன. பிற்பாதியிலுள்ள அத்தியாயங்கள் இருபத்துநான்கு. தமிழ் **அருணசல புராண** முற்பகுதியிற் சொல்லப்படுங் கதைகளே இவ் வடமொழி மாஹாத்மியத்தில் இரண்டு பிரிவுகளிலும் விரிவாகச் சொல்லப்பட்டன. வச்சிராங்கதன் நற்கதி யடைந்ததோடு மாஹாத்மியம் முடிவு பெறுகிறது. வல்லாள மஹா ராஜன் சரித்திரம் அதிற் கூறப்படவில்லை.

அருணசல புராணப் பிற்பகுதியிற் சொல்லப்படுங் கதைகள் வடமொழி உலகத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகிய குலசேகர பாண்டியர் **இலிங்க புராணத்துக்** காணப்படவில்லை. ருத்திர சங்கிதை யென்பது ஸ்காந்த மஹா புராணமாயினுற் போல இலிங்க புராணம் எதைக் குறித்ததோ ஆராய்ச்சியிலேயே விளங்க வேண்டும்.

திருவெண்காட்டுப்புராணம்

திருவெண்காட்டுப் புராணம் நூலாசிரியர் கோத்திரத்தாரொருவராகிய திரு. சிதம்பரம் பிள்ளையால் கி. பி. 1905-ல் அச்சிடுவிக்கப்பட்டது. திருவெண்காடு வடமொழியில் சுவேதாரண்ய மெனப்படுவது. சீகாழிக்கருகிலுள்ள சிவஸ்தலம். இப்புராணப்பதிப்பிலேயே சைவ எல்லப்ப நாவலர் வரலாறு

முதலாக வெளிவந்தது. இப்புராணம் சுவேத வனம், திரு நகரம், தீர்த்தம், வேதராசி, சத்திய நல்விரதம், அக்கினி தீர்த்தம், சந்திர தீர்த்தம், ஆதித்த தீர்த்தம், சுவேத, கேது, இந்திரன் பழி தீர்த்தது, ஐராவதச் சிவப்பிரியர், ஐராவதம், வியாக்கிரபாதன், சுவேதன், மருத்துவன், தாண்டவம், இலிங்கம், திருவிழா என்னும் பதினெட்டுச் சருக்கங்களும் பாயிர முட்பட 614 செய்யுட்களுமுடையது. பாயிரத்தில் மெய்கண்ட சுவாமிகளுடைய சரித்திரம் சுருக்கி யுரைக்கப்பட்டுளது.

மெய்க்கடந்தை யச்சுதனுங் களப்பா ளன்றான்
விருப்பமிகுஞ் சிறுவருக்கா வெண்கா டெய்தி
முக்குளத்திற் படிந்துதவம் புரியும் போது
மோனியெனு மொருபுதல்வன் முதல்வ னீந்தான்
றக்கபுகழ்ச் சுவேதவனப் பெருமா னென்றே
தனயனுக்குத் திருநாமந் தரிப்பித் தைந்து
கைக்களிறு வரங்கொடுக்கும் வெண்ணெய் நல்லூர்த்
காங்கெயபூ பதிமனையிற் கலப்பித் தானே.

மன்னுசிவ சமயநெறி வளர வேண்டிப்
பரஞ்சோதி யடிகளந்தப் பதியின் மேவி
மன்னுபுகழ்ச் சுவேதவனப் பெருமா னிங்கே
வருகவென விளம்புதலு மவுன நீங்கித்
தன்னிகரி லவனதருள் பெற்றுச் சைவ
சந்தான நெறிதழைக்கத் தமிழ்நூல் செய்தோன்
அன்னையிலன் புடையவன்மெய் கண்ட தேவ
னடியவருக் கடியவர்தா ளகத்திற் சேர்ப்பாம்.

பட்டினத்தடிகள் துதியும் அவர் வரலாற்றைச் சிறிது விளக்கும்.

தம்மகத்திற் செல்வமெலாம் பொய்யென் றெண்ணிச்
சத்தியமெய்ப் பொருளுணர்ந்து தவத்தோர் போற்றல்
செம்மலுக்குத் திருவிசைப்பா விசைத்துத் தெய்வ
சிகாமணியாந் திருவாரூர்ச் செல்வ னார்க்கு
மும்மணிக்கோ வையும்பகர்ந்து திருவெண் காட்டின்
முதல்வருக்கு மகபூசை முடித்தோர் நாகப்

பைம் மணித்தார் காவிரிப்பூம் பட்டி னத்துப்
பட்டினத்துப் பிள்ளைபதம் பரவு வாமே.

சைவ சமய குரவர் மூவர் துதிகள் வருமாறு:

இரு குடங்கொண் டொரு குடத்தில் வெண்பொடிபெண் கொடி
வெழுவித் தோனைத் [யாக
திருவருளாற் பாலருந்தி யேடதனை யாற்றிலிட்ட
தெய்வக் கோவை
யருமறையின் றலைக் கொழுந்தை யாகமத்தின் றனிமுதலை
யடியார் வாழ்வைப்
பரசமய கோளரியைக் கவுணியர்சூ ளாமணியைப்
பரவு வாமே. [திருஞான சம்பந்தர்]

இற்றூணின் மரகதத்தி னொளிபகலு மிருள்காட்ட
வெழுந்து காமன்
விற்றூணி மலரெடுத்து விளையாடுந் திருவாமூர்
விளங்க வந்தோன்
கற்றூணைப் பிடித்துவளை கடல்கடந்தோ னிருபாத
கமல மான
பொற்றூணைப் பிடித்துநம திடராழி கடந்துகதி
புகுத லாமே. [திருநாவுக்கரசர்]

இருமுதலை யடைந்துநரை முடியசைய வாவணமொன்
றேந்திப் போந்த
வொருமுதலை நவநீத புரியானை வழக்கேற்றி
யுரைத்த கோவை
யருமுதலை குழவிதர மறையொழுகுங் கனிவாயா
லழுதப் பாட
றருமுதலை யடிபணிந்து கருமுதலை வேரினெடுந்
தள்ளு வாமே. [சுந்தர மூர்த்திகள்]

சைவர் துதியாக இரண்டு செய்யுட்கள் வந்துள்ளன.

குற்ற மற்ற திருத் தொண்டர் கூட்டமும்
வெற்றி யாகிய மேருவு மொக்குமே
புற்றி டங்கொள் புராந்தகர்க் கல்லது
மற்றெ வர்க்கும் வணங்குவ தில்லையால்.

தெய்வ மாகவொர் தேவரை யுங்கொளோ ஞ்
சைவ ரானவர் தாளிணை போற்றுவோம்
வைய மீதினில் வன்றொண்ட னுக்குமுன்
னைய னேவல் புரிந்தன னுதலால்.

அவை யடக்கமாக நான்கு செய்யுட்கள் காணப்படுகின்றன :

உற்ற செய்யுளா லருணை மா நகர்ச்சிறப் புரைத்தேன்
குற்ற மானவை குணத்தவர் பொறுத்துளங் கொண்டா
ரிற்றை நாளுமச் செருக்கினு லிதனையு மிசைத்தேன்
கற்ற மாந்தருக் கனைத்தையும் பொறுப்பது கடனால்.

வல்லவியற் புலவர்பல கவிக டோறும்
வழுக்கள்வந்த வகை தேடி மயங்கா வண்ணஞ்
சொல்லினது விதிக்குற்ற மெழுத்தின் குற்றந்
தொடர் நிலைச்செய் யுளின்குற்றந் தொடர்பின் குற்ற
நல்லதொடை களின்குற்றங் குணத்தின் குற்ற
நவரசத்தின் குற்றமோ டனந்த குற்ற
மெல்லையற்ற குற்றமெலா மெளிதிற் காண
விலக்கியமா வதற்கிதனை யியம்பு கேனே.

செப்புமியற் றமிழ்களெல்லா மரியயனே முதலாய
தேவர்க் கோதி
யொப்புவிக்க வறியா லரனிடத்தே விளைத்துவளைத்
துரையா நின்றேன்
மைப்பரவை தருவிடமு நீறுமென்பு மாடரவும்
வனப்பாக் கொண்டா
னப்பொறுமை யுடையவனென் புன்கவியும் பொறுப்ப
வறிந்து தானே. [னெண

அலர்மதியு மென்கவியுங் களங்குறையுங் கலைகுறையு
மானக் காலும்
புலவரெலா மிகமகிழ்ந்தின் னமுதெனவே பயனுகர்ந்து
புகழா நிற்பர்
நிலவுமிழு மதிகரவு புரிபவர்க்கும் விரகியர்க்கு
நெருப்பாத் தோன்று
முலகினிலென் கவியழுக்கா றுடையவர்க்கும் பேதையர்க்கு
முவப்பெய் தாதே.

திருவெண்காட்டுச் சிறப்பு பதினெண் புராணங்களு ளொன்றாகிய **ஸ்காந்த** புராணத்துச் சங்கர சங்கிதையில் உரைக்கப்பட்டதாம்.

செவ்வந்திப் புராணம்

செவ்வந்திப் புராணம் திரிசிராமலைச் சிறப்புரைப்பது. வடமொழிச் சிவபுராணத்தில் கோதமனார் கூறியதாக இத்தல புராண முரைக்கப்பட்ட தென்பதற்குமேல் விவரம் ஒன்று மில்லை. இப்புராணம் திருமலை, பிரமதேவன் அசத்தியந் தீர்ந்தது, அகத்தியன், இந்திரன், தீர்த்தம், திருநகரம், நினைந்தது கொடுத்தது, சாரமாமுனி, சூரவாதித்தன், உறையூரழிந்தது, தாயானது என்னும் பதினொரு சருக்கங்களும் பாயிரமுட்பட 550 செய்யுட்களு முடையது. பாயிரத்தில் சேய்ஞலூர்ப் பிள்ளையார் துதி யுரைக்கப்பட்டமை கவனிக்கத்தக்கது. தலத்துப் பெருமான் பெயர் செவ்வந்தீச்சுரர் எனவும் வழங்கும் சாரமாமுனிவர் பாதலத்தினின்று கொணர்ந்து மலியச்செய்த செவ்வந்தி மலர் பெருமானுக்குகந்ததாயிற்று. அச் செவ்வந்தி மலரிடத்து ஆசை வைத்து அறமிழந்த மன்னன் உறையூரு மழிந்தது. தாயான வரலாற்றாலேயே தாயுமானவர் என்னும் பெயர் தலத்துப் பெருமானுக்கு அமைந்தது. அனந்தனுக்கும் வாயுவுக்கும் நடந்த போரில் வாயு மேருவின் மூன்று கொடு முடிகளைப் பறித்துத் தென்றிசையி லெறிந்தனன். முன்னர் வீழ்ந்த சிகரி காளத்தி, பின்னர் வீழ்ந்தது திரிசிராமலை, அதன் பிறகு கோணமாமலை. இம்மூன்றையும் தெக்கண கயிலை யென் றிசைப்பர். பிற்காலத்து கரதூடணரோடு சம்பந்தமுடைய திரிசிரா நகர மமைத்துத் தன் பெயரால் அதுவும் மூர்த்தியும் வழங்க வேண்டுமென்று விரும்பி வரம்பெற்றதனால் சிராப் பள்ளி முதலிய பெயர்கள் வந்தன.

இப்புராணம் காவியச் சுவை மிகுதியுமுடையது. உறையூரழிந்த சருக்கத்தில் சாரமாமுனிவர் சோழனுக் குரைத்த இடித்துரை மிகவும் பாராட்டற்பாலது. உறையூரில் மண்மாரி

பெய்து அழிவேற்பட்ட காலத்து அரசன் தன் பத்தினியோடு பரியேறித் தப்பமுயன்றும் காவிரிக்கரைவரை வந்து பரியோடு தானும் விழுந்தான். அதற்கு முன்பே கருமுற்றி யிருந்த அரசியும் காவிரியில் விழுந்து ஊழ்வயத்தாற் பிழைத்துக் கரையேறி ஆங்கிருந்த முனிவராச்சிரமத்தை யடைந்து சீதை வான்மீகராற் காக்கப்பட்டதுபோல அவராற் காக்கப்பட்டு, கருவுயிர்க்கு நேரம் வருதலும் ஒரு கடிகை பொறுத்தல் நலமெனக் கூறிய ஒரு முனிவன் சொற்கேட்டுக் கால் மேலாக நின்று பின் கருவுயிர்த்தாள். அங்ஙனம் பிறந்த பிள்ளைக்கும் நான்கு ஆண்டு கழிந்தது. அப்பொழுது சாரமாமுனிவர் சொல்லக் கேட்டு மந்திரிகள் அரசுவாவைக் கண்ணைக்கட்டி விடுத்தனர். அது சென்று அரசகுமரன் விளையாடிக்கொண்டிருந்த விடஞ் சென்றுஅவனை அசைத்தது. இச்செய்தி கேட்ட தாய் வருந்தித் தம் தந்தை போன்ற முனிவர்க்குரைப்ப அவர் காலில் கரியைத் தடவச் சொல்ல அவளும் அவ்வாறு செய்தனள். அரசுவாவும் பிள்ளையைத் தூக்கிச் சென்று சிராமலையீசர் திருமுன் விடுத்தது. மந்திரிகள் சோழர் முடியை சிவனுக்கணிந்து இவனைக் கரிகால னென்றழைத்தனர். கோச்செங்கட் சோழன் பிறந்த வரலாறு இவ்வரச குமரன் பிறந்த வரலாற்றை யொத்திருத்தலும், கரிகால னென்பதற்கு வேறு வரலாறு கூறுவதும் நோக்கத்தக்கன.

இப்புராணம் திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை யவர்களாற் பரிசோதிக்கப்பட்ட பிரதிக்கிணங்க திருமயிலை வித்வான் சண்முகம் பிள்ளையவர்களாற் பார்வையிடப்பட்டு கி. பி. 1887-ல் இரண்டாமுறை வெளி வந்ததாகக் காணப்படுகிறது. முதற்பதிப்பு அகப்படவில்லை.

திருவிரிஞ்சைப் புராணம்

திருவிரிஞ்சைப்புராணம் பாலியாற்றங்கரையிலுள்ள விரிஞ்சீபுரத்தின் சிறப்புரைப்பது. இப்புராணம் நைமிசாரணியம், கௌரீபுரம், விண்டுபுரி, கரபுரி, விரிஞ்சைப்புரி, வழித்துணை,

பரலோகம், பாலனுக்குத்திருமுடி வளைத்தது என்னும் எட்டுச் சருக்கங்களும் பாயிரமுட்பட 370 செய்யுட்களு முடையது. இப்புராணத் தலைபடக்கத்துச் செய்யுளும் "உற்ற செய்யு ளால்" என்பதே. ஆதியில் பிரமதேவன் சிருட்டித்தொழில் அறியாதிருந்து சிவபெருமானைத் தியானிக்க அவரும் வெளிப் பட்டு அவனுக்குச் சிருட்டி முறைமையினை அறிவித்தார். அவன் மகிழ்ந்து கரபுரியை யடைந்து அங்கு அவரை வழிபட்டுத் தன் பெயரால் ஒரு தீர்த்தமும் உண்டாக்கினன். அது முதல் அத் தலம் விரிஞ்சை யெனப்பட்டது. வழித்துணையான வரலாற்று லேயே தலத்துப் பெருமானுக்கு மார்க்க சகாயரென்னும் பெயர் அமைந்தது. திருவிரிஞ்சை வைப்புத்தலங்களுளொன்று. இத்தலப் பெருமை ஆதியில் சிவபிரானல் முருகக்கடவுளுக்கு உரைக்கப்பட்டுப் பின் அவரால் வசிட்ட முனிவருக்கு உரைக் கப்பட்டது.

நைமிசாரணிய சருக்கத்தில்விரிஞ்சைப் பெருமையுரைக்கு மிடத்து ஆசிரியர் வேதாகமங்களின் வரலாற்றையும் அவற்றி னியல்பையும் விளக்கினர்.

ஆதி யாகிய பரசிவன் பராபரை யருளால்
நாத மானது விரிதலு மதனிலே நண்ணி
வேத மாகம பதங்கள்மந் திரங்களை விதித்தார்
ஏத மின்றிய சதாசிவத் திறையவ ரேற்றார்.

சிவச தாசிவ முதலினே ரணுசதா சிவனுக்
கவைதெ ளிந்திட விளம்பின ரணுசதா சிவரும்
நவம தாகவே யனந்தரா தியருட னவின்றார்
புவன நாயகன் பெறும்படி யனந்தரும் புகன்றார்.

உருத்தி ராதிகட் கிறைவராய்க் கயிலையி லுறைவார்
விருத்தி யாகமா லயன்மக பதியுடன் விரித்தார்
அருத்தி மாலயன் மகபதி முனிவருக் கறைந்தார்
பரித்த பூமியி டைந்தது பரம்பரை யாக.

வேத மாகம மிரண்டுமே யநாதியில் விளைந்த
தாதி நூன்மறை யநாதிநூ லாகம மாகும்

ஓதி னுன்மறை யளித்திடு மிமையவ ருலகம்
காத னுகமம் படித்தபேர்க் குறுங்கதி நாலும்.

ஆக மங்களை யறிஞர்சம் மதியென வறைவார்
ஓகை நண்ணினர் சம்மதி புராணமென் றுரைப்பார்
பாகி லின்புறுங் காவிய நாடகப் பரப்பைத்
தோகை மங்கையர் சம்மதி யாமெனச் சொல்வார்.

இச் சருக்கத்திலும் பாலனுக்குத் திருமுடிவளைத்த சருக்கத்திலும் ஆசிரியர்க் கிருந்த சைவாகமப்பயிற்சி நன்கு விளங்குகின்றது. மற்றச் சருக்கங்கள் அவர் வேத புராணுதிகளிலும் பயின்றிருந்தன ரென்று காட்டும்.

இப்புராணம் வித்வான் காஞ்சீபுரம் சபாபதி முதலியார் பழைய வுரையைச் சிறு பான்மை தழுவிக்கொண்டு இயற்றிய பொழிப்புரையோடு சென்னைக் களாநிதி அச்சுக்கூடத்தில் உருத்திரோற்காரி வூ கார்த்திகைமீ (1864) பதிப்பிக்கப்பட்டது. இப்பதிப்புக்குச் சிறப்புப்பாயிர மியற்றியவர் உரையாசிரியர் மாணுக்கரு ளொருவராகிய புரசை அஷ்டவதானம் சபாபதி முதலியார். இவர் தம் சிறப்புப்பாயிரத்தில் சைவ எல்லப்ப நாவல ரியற்றிய புராணங்கள் **திருவிரிஞ்சைப் புராணத்தை** யன்றி **அருணசல புராணம், விருத்தாசல புராணம், செவ்வந்திப் புராணம்** முதலிய பிறவு முண்டென்று கூறி, நாவலர் வாக்கைப்பற்றி,

தன்னிகர் தருசெந் தமிழிற் புனைந்த
அரனெறி வழாஎல் லப்பநா வலர்கோன்
விரிபொருட் சொன்னலம் வியன்றெடை விகற்பஞ்
செறிய வுருவக முதலிய சீரணி
யுறவின் ஞேசைய தாயமு தூற்றெழீஇ
யவரவ ருள்ளத் தமைவுறப் பணித்ததை

என்று புகழ்ந்து முரைத்தனர். **விருத்தாசல புராணம்** துறையூர் ஞானக்கூத்த சிவப்பிரகாச தேசிகர் செய்த தொன்று வெளிவந்துளது. சிறப்புப்பாயிரகாரர் கூறுமாறு எல்லப்ப

நாவலரியற்றிய **விருத்தாசல** புராணம் ஒன்றுண்டோ என்பது ஆராயற் பாற்று.

தீர்த்தகிரி புராணம்

தீர்த்தகிரி புராணம் சேலம் ஜில்லா ஊற்றங்கரைத்தாலுகாவைச் சார்ந்த தீர்த்தகிரி யென்னும் தலப்பெருமை யுரைப்பது. இப்புராணத் தவையடக்கச் செய்யுள்கள் "உற்ற செய்யுளால்," "செப்பரிய," "அவர் மதியும்" என்னும் மூன்றுமே. இவை **திருவெண்காட்டுப்** புராணத்தும் காணப்படுகின்றன. முதற் செய்யுளுள் நான்காமடி "கற்ற மாந்தர்களனைத்தையும் பொறுப்பது கடனே" என்றுளது. இரண்டாவது செய்யுளுள் "செப்பரிய தமிழ்கள்," "ஆடரவு நீறுமென்பு மன்பாய்க் கொண்டா, ரப்பெருமை யுடையவரென் புன்கவியும் பொறுப்பரென" என்பன பாடபேதங்கள். மூன்றுஞ் செய்யுளுள் "மிக மகிழ்ந்தே யமுதெனவே" என்பது பாடபேதம். சைவ சமயர் துதியாகக் காணப்படும் "தெய்வமாக," "குற்றமற்ற" என்னும் இரண்டு செய்யுட்களும் **திருவெண்காட்டுப்** புராணத்துங் காணப்படுகின்றன. சம்பந்தர் துதி, நாவுக்கரையர் துதி, சுந்தரர் துதி மூன்றும் முறையே "இரு குடம்," "இற்றாணின்," "இருமுதலை" என்பன. இவையும் **திருவெண்காட்டுப்** புராணத்துக் காணப்படுவன. இவ்வெட்டுச் செய்யுட்களும் **தீர்த்தகிரி** புராணத்தினின்று மெடுத்துத் **திருவெண்காட்டுப்** புராணத்துச் சேர்க்கப்பட்டனவோ அன்றி ஆசிரியரே இரண்டு புராணங்கட்கும் இச்செய்யுட்களையே செய்தமைத்தனரோ அறியுமாறில்லை. ஆயினும் **திருவெண்காட்டுப்** புராணத்து இக்குரவர் துதிகளை யன்றி, 'சமய குரவர் மூவர் திருமுறை' என்ற தலைப்பின் கீழ்,

காழிதனிற் பெருமானைக் காட்டியகைத் தமிழ்விரகன்
கழற்றாள் போற்றி
யாழியிலே குண்டரிடுங் கன்மிதப்ப வந்தபிரா
னடியை யேத்திச்

சூழியப மன்றுரித்தார் துணையான தோழனடித்
துணையை வாழ்த்தி
வாழியவர் திருமுறைக ளேழையுநம் மனதார
வழுத்து வாமே.

எனவருஞ் செய்யுளையும், 'மாணிக்கவாசக சுவாமிகள்' என்ற தலைப்பின் கீழ்,

சிற்றம் பலக்கோவைத் தேன்சொரியுஞ் செம்முகிலை
மற்றொப்பி லாததிரு வாசகத்தின் வாரிதியை
கற்றைச் சடையான் கருத்துருக்குங் காதலனைக்
கொற்றத் திருவாத வூரனைக்கை கூப்புதுமே.

என வருஞ் செய்யுளையும் சேர்த்து நோக்கின் மூவர் தனித் துதிகள் **திருவெண்காட்டுப்** புராணத்திற்காக இயற்றப்பட்டன வல்லவெனத் தோன்றும். அவ்வாறே அவையடக்கச் செய்யுள்களும் "வல்லவியற் புலவர்" என்பது **திருவெண்காட்டுப் புராணத்தே** யன்றி வேறிடத்துக் காணப்படாதது. "உற்ற செய்யுளால்" என்பது **திருவிரிஞ்சைப் புராணத்துங்** காணப் படுவது. அதனினின்று மெடுத்து இங்குச் சேர்க்கப்பட்டது போலும். இதற்கு இரண்டு செய்யுட்கள் உள்ளனவன்றோ! மற்று, இப்புராணங்கட் கெல்லாம் ஏற்பட்டது **அருணசல புராணம்** என்பதனை அது காட்டும்.

இனி, வான்மீக முனிவரால் ஸ்ரீராம சரிதம் பாரத்துவாச முனிவர்க்கு உபதேசிக்கப்பட்டது. அதில் உள்ளதாம் இத் தீர்த்தகிரிமான்மியம், ஸ்ரீராமர் இராவண வதத்திற்குப் பின் சேதுவை யடைந்து பிரமகத்தி நீங்கும்படி இராமநாத மூர்த்தி யைப் பிரதிஷ்டை செய்து அங்கிருந்து புறப்பட்டுச் சென்று இடையில் இளைப்பாறுதற்காகத் தண்டகாவனத்தை யடைந் தார். அங்கு அகத்திய முனிவர் ஸ்ரீராமரைக் கண்டு தீர்த்த கிரியின் பெருமையை அவர்க்கு விரிவாக வுரைத்தனர். அகத் திய தீர்த்தச் சருக்கத்தில் இல்வலன் வாதாவி யென்போர் கதை சொல்லப்பட்டுளது. ஆசிரியர் இல்வலனென் றெழுதி யதைப் பதிப்பித்தோர் பல விடங்களில் வில்வலனென்று திருத்

தித் திருத்த முடியாத விடங்களிலொன்றில் 'வில்வலன் என்பது இல்வலனென மரீஇயிற்று' என்றெழுதி வைத்தனர். சுவேத கேதுச் சருக்கம் வரை அகத்தியர் ஸ்ரீராமருக் குரைத்தவை. இராம தீர்த்தச் சருக்கம் வான்மீக முனிவரே உரைத்தது. ஸ்ரீராமர் பிரார்த்தனைக் கிரங்கித் தீர்த்தம் பொங்கி வந்த வரலாறு மிக அழகாக உரைக்கப்பட்டது.

இப்புராணத்துக் காவியச் சுவை அதிகமாகக் காணப்படுகின்றது. அதனை நூலை வாசித்தே யறியலாகும். கொலையின் தீமையையும் அன்னதானத்தின் பெருமையையும் உரைக்குஞ் செய்யுட்கள் இங்குத் தரற்பால.

அம்பு ராசிநேர் கிருமிவன் குழியினி லழுந்திக்
கும்பி பாகமாம் பெரும்படுங் குழியினுங் கூடிச்
செம்பு ராசியா யுருச்கிய நரகினுஞ் செறிவ
ரும்ப ராகிலுங் கொலைசெய நினைத்திடு மொருவர்.

பல்லு யிர்க்குப கரிப்பதே யறமெனப் படுவ
தல்ல லைக்கொடுத் திடுவதே வினையெனு மதனாற்
கொல்லு தற்கரி தானது கொல்லரும் படைதான்
வெல்லு தற்கரி தாமென வுரைப்பரே வீரர்.

கன்னி தான நெடும்புவியுங் கலையு மாவுங் கனப்பரியு
மின்ன தான மணித்தேரும் வேண்டும் பணியு மென்பழனச்
சொன்ன தான மற்றுமுள சுகிர்த யாக பலன்களெலாம்
அன்ன தான பலத்தை நிக ராமோ வாகா தாகாதே.

போதநல் லறிவு மைந்து புலன்களும் பொறியு ஞானச்
சோதியங் கடவு ளாரைத் தொழுகையு மறத்தின் பேறு
மாதரில் லறமு மன்ன மயங்கொடுத் திடுத லாலே
யோதன முதவி னோனே யுயிரையு முதவி னோனே.

[இது 'உண்டி கொடுத்தோ ருயிர் கொடுத்தோரே' என்னும் புறநானூற் றடியை நினைப்பூட்டும்.]

உண்டி யுதவுங்கொடைபோலே யுலகிற்சிறந்த கொடைகாணேன்
கொண்ட கொழுநற் கிணையாகச் சிறந்த கடவுட் குலங்காணேன்

மண்டு மறத்திற் சிறப்பாய துணையுங் காணேன் மறுமையின்கட்
கண்ட வுறுப்பிற் கருவிழிபோற் சிறந்த வுறுப்புங் காணேனே.

இப்புராணம் புதுவை க. சுப்பராய முதலியா ரியற்றிய பொழிப்புரையுடன் கல்வி விளக்க அச்சுக்கூடத்தில் சுக்கில ஆு தைமீ (1870 பெப்ருவரி) பதிப்பிக்கப்பட்டது. புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் முதலிய வித்வான்கள் முன்னிலையிற் பரிசோதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. சபாபதி முதலியார் இப்பதிப்பிற்குச் சிறப்புப்பாயிர மளித்துள்ளார். அதில் அவர் ஸ்ரீராயர் சேனையோ டிறுத்த பாசறை திகழ்த லால் "அரியூ ரெனத்திசை யகன்ற சீர்ப்பதியத்" என்றலின் தீர்த்தகிரிக்கு அரியூ ரெனவும் பெயர் வழங்கலுற்றதெனத் தோன்றுகிறது. ஆயினும் புராணத்தில் ஸ்ரீராமர் வருவதற்கு முன்னரே அப்பெயருடைய ஊர் இருந்ததாகச் சொல்லப்பட்டுளது. எல்லப்பநாவலரைப்பற்றிச் சொல்லுங்கால் முதலியார்,

தென்றமிழ் மொழியிற் சீரிய காவிரி
சூழ்நலங் கெழுமு சோழநன் னாட்டினன்
சிவசம யிகட்கெலாம் பொதுவுறச் செப்பிடுந்
தவவபி தானந் தனக்கே சிறப்பெனு
அறிஞர்சொற் றிடலா வியாண்டுமீக் கூறுஞ்
சைவஎல் லப்பநாவல னெனுந்தகை
யுய்வகை யெவரு முணர்சொற் பொருட்சுவை
பரவப் புகன்றருள் புராணப் பனுவற்கு

என நாவலரையும் புராணத்தையும் ஒருங்கே புகழ்ந்தனர்.

புறப்பொருள் விளக்கம் - அ

காஞ்சித்திணை

காஞ்சித்திணை

[இளவழகனார்.]

வெடிபடக் கடந்து வேண்டுபுலத்து இறுத்த
பணைகெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்
கரைபொருது இரங்குங் கனைஇரு முந்நீர்த்
திரை இடு மணலினும் பலரே உரைசெல
மலர்தலை உலகம் ஆண்டுகழிந் தோரே.

(மதுரைக் காஞ்சி, உ௩௩-எ.)

'பகைவர்களுக்குக் கேடு உண்டாக வென்று பின்னும் அழிக்கவேண்டுமென்று விரும்பிய நிலங்களிலே சென்று தங்கிய வெற்றி முரசு பொருந்தின பெரிய வலியினையும் வேல் முதலிய பல படைகளையுமுடைய அரசர்கள், கரையை அலைத்து ஒலிக்குஞ் செறிந்த கரிய கடலலைகள் கொணர்ந்து குவிக்கின்ற மணலினும், எங்கும் புகழ்பரக்கும்படி அகன்ற இடத்தையுடைய இவ்வுலகத்தை ஆளுகைசெய்து மாண்டுகழிந்தோர் பலராவரென்க. எனவே, அவரெல்லாருந் தமது உயிரறிவைப்பெருக்கி இறைவன் றிருவருளுணர்ந்து பிறவியையொழித்தற்குமுயலாது, வீணுக நிலையில்லாப் பொருள்களை விரும்பி வாழ்நாள் கழித்துப் பயனின்றிக் கழிந்தார்; ஆகவே நீயும் அவ்வாறு கழியாமல் மெய்ப்பொருளுணர்தலிற் கருத்தீடுபடுவாயாக வென்று அறிவுறுத்தவாரும்; இது தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் பாடி அறிவுறுத்தியதாகும். இன்னோரன்ன வியல்புகளெல்லாம் "மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையு"* மென்று ஆசிரியர் வகுத்துக்காட்டிய பெருங்காஞ்சியுள் அடங்கும்.

"இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மாநில
முடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்

* தொல், புறத், உ௪.

தாமே யாண்ட வேமங் காவல
ரிடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்த
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே "*

என்னும் புறநானூற்றுச் செய்யுளும் இவ்வியல்பு தேற்றி யெழுந்ததாகும். 'இரங்குந்திரை' யென்க. 'கழிந்தோர் பல' ரென்பது. ஏகாரங்கள் முறையே பிரிநிலையும் அசையுமாம்.

இனிக் 'காஞ்சித்திணை' யென்பது உலகத்தின் நிலையாமையுணர்ந்து அதற்கேற்ப ஒழுகும் ஒழுக்கமாம். வெட்சித்திணை முதல் வாகைத்திணையீறாக நிகழும் புறப்பொருளொழுக்கங்களில் அரசன் படிந்து நின்றமையாற், பொருணுகர்ச்சி முழுமையும் அவன் நுகர்ந்துணர்ந்தானாயிற்று. நுகர்ச்சி பெருக பெருக அந்நுகர்ச்சியின் நிலையாமையும் வளர்ந்து வருதலால், அரசன் அதனைப் பலவகையானும் உணர்ந்து எல்லாப் பொருள்களினும் ஒரு துவர்ப்புண்டாகப் பெறுந்தகுதியை அடைகின்றான். அடையவே, அவன் பின்னும் பின்னும் பல அயல்நாடுகளின்மேல் வீழ்ந்து பொருது கைப்பற்றுதலில் அவாவிலனாய்த் தனது அரிய பிறவியைத் தூய்மை செய்துகோடவே இனிச்செயற்பாலதாமெனத் தன்னறிவானும் பிறர்கூற்றானுந் துணிந்து மற்றதற்குரிய அறவொழுக்கத்தில் ஈடுபடுவான்; இம்முறையே ஏனையோர்க்கும் ஒக்கும்; இவ்வாறு நிலையாமை யுணர்ச்சியினாற் பொருந்தும் நன்னெறி யொழுக்கமே உலகியனீர்மையில் பலபடியுந் தெளிவெய்தி முழுமுதலலக்கணம் வழுவின்றி யுரைப்பாரான ஆசிரியர் தொல்காப்பியனாரால் 'காஞ்சி' யென்று வகுக்கப்பட்டதென்பது,

" பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானு
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே "

என்று அவரியற்றிய தொல்காப்பிய நூற்பாவினாற் றுணியப்படும். எவர்க்கும் பொருள்களினுகர்ச்சியால் நிலையாமை யுணர்ச்சியுண்டாதலும், அதனால் அவர் நல்லொழுக்கம் பொருந்துத

---

* புறம் ௩௬௩.

† தொல், புறத், ௨௩.

லுமே உலகிய லுண்மையினுங் காணப்பட்ட முடிபாம். இவ்வி யல்பினை யுற்றுணர்ந்தே ஆசிரியர் அதனைக் 'காஞ்சி' யெனக்கூறி வேறு வகுப்பாராயினர். ஈதுணரமாட்டாத பன்னிருபடலமுடையார் முதலியோர் எதொரு பொருட்சிறப்புங் காட்டாது தமக்குத் தோன்றியவாறே 'காஞ்சியென்பது வஞ்சி வேந்தனுக்கு எதிர் சென்றூன்றுத' லென உரைத்து ஆசிரியரொடு மலைந்தார். வஞ்சி வேந்தனுக்கும் அவனுக்கு எதிர்சென்றூன்றிய மாற்றுவேந்தனுக்கும் அஞ்ஞான்றுபட்ட உள்ளநிலை ஒன்றேயாமென்பதும், அதுபற்றியே ஆசிரியர் அவ்விருவரையும் வஞ்சிமன்னரென்றே ஒருவராகக் கருதியுரைத்தாரென்பதும், அங்ஙனம் உரைத்தலே இருவகை வழக்கிற்கும் பொருத்தமாமென்பதும் 'வஞ்சித்திணைக்' கட்டுரையிலேயே நன்றாய் விளக்கிக் காட்டியிருக்கின்றேம். பன்னிருபடலமுதலியன பொருட்சிறப்பின்றிப் படலவளவாய் விரித்துரைக்குங் காஞ்சித்திணையென்பது, ஆசிரியர் வஞ்சித்திணைக்குரைத்த

> " எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
> அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித்தன்றே " *

என்னு நூற்பாவிலேயே பொருத்தமாய் அடங்கியமைதல் மிகத் தெளிவாய்ப் புலப்படாநிற்கின்றது. இவ்வுண்மைகளையெல்லாம் யாமுரைத்தவாறே ஆசிரியர் நச்சினார்க்கினியரும் அவ்வஞ்சித் திணை நூற்பாவின் கீழ் 'ஒருவன் மண்ணசையான்மேற்சென்றால் அவனும் அம்மண்ணழியாமற் காத்தற்கு எதிரே வருதலின், இருவர்க்கும் மண்ணசையான் மேற்சேறல் உளதாகலின், 'அவ்விருவரும் வஞ்சிவேந்தராவ ரென்றுணர்க' வெனத் தன்னுறுகருத்துரைத்தும், 'எதிர்சேறல் காஞ்சியென்பராவெனின், காஞ்சியென்பது எப்பொருட்கும் நிலையாமை கூறலிற் பெரிதும் ஆராய்ச்சிப் படும் பொதுவியற் பொருண்மைப் பெயராற் கூறவாகாமை யுணர்க' வெனப் பிறர்மத மறுத்துக் களைந்தும் உரை நிறுத்தினமை யறிந்துகொள்க. எனவே செவ்வறிவுப்பேறு வாய்ந்த

---

* தொல், புறத், உஎ.

தெய்வப்பெற்றியரான ஆசிரியர் தொல்காப்பியனுர் உலக நிலையாமை யுணர்ந்து அதற்குத் தகவொழுகுவதோ ரறவொழுக்கத்தைப் புறமொழுகுவார்க்கு வகுத்து, மற்றதனைக் காஞ்சியென்றுரைத்தமையே, உலகியலைக் கூர்த்துணரும் நுண்ணறிவினரெல்லாராலும் பாராட்டி ஏற்றற்பாலதாமென்பது கூறுமலே விளங்குமென்க. ஆசிரியர் கருத்து ஈதாயிருத்தலின், இக்காஞ்சித்திணையே இடனுக எல்லாப் பொருள்களின் நிலையாமையையும் அவர் விடாமலெடுத்து நன்கு விளக்குவர்.

இனி ஆசிரியர் இக்காஞ்சித்திணைக்கு இருபது துறைகள் வகுத்துக் காட்டுகின்ருர்; அவ்விருபது துறைகளையும் இருகூருக்கித் தனித்தனியாகப் பப்பத்துத்துறைகள் தொகுத்துரைப்பார். எனவே அவற்றின் முதற்பத்துத் துறைகளாவன:

“மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையுங்,
கழிந்தோ ரொழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்,
பண்புற வரூஉம் பகுதி நோக்கிப்
புண்கிழித்து முடியு மறத்தினனு,
மேமச் சுற்ற மின்றிப் புண்ணோற்
பேஎ யோம்பிய பேஎய்ப் பக்கமு,
மின்னனென் றிரங்கிய மன்னை யானு
மின்னது பிழைப்பி னிதுவா கியரெனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானு,
மின்னகை மனைவி பேஎய்ப் புண்ணோற்
றுன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியு,
நீத்த கணவற் றீர்த்த வேலிற்
பேஎத்த மனைவி யாஞ்சி யானு,
நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பா டஞ்சிய மகட்பா லானு
முலையு முகனுஞ் சேர்த்திக் கொண்டோன்
றலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
யீரைந் தாகு மென்ப”*

என்பதனுற் றெளியப்படும்.

---

* தொல், புறத், ௨௪.

தடுத்தற்கரிய கூற்றுவன் வருவானென்று யாக்கை நிலையாமையை யெடுத்துக்கூறி யறிவுறுத்தல் 'பெருங்காஞ்சியெனப்படும்; இளமை கழிந்து அறிவுமிக்கோர் பேரறிவு சாலாத இளைஞர்களுக்கு அறிவுறுத்தல் 'முதுகாஞ்சி'யாம். போர்க்களத்தில் பொருது புண்பட்டவீரன் தனது வாழ்க்கையின் நிலையாமையை யுணர்ந்து புண்கிழித்து முடிதல் 'மறக்காஞ்சி' யென்க. பாதுகாக்கும் உறவினர்களில்லாமையினாற் போரிற் புண்பட்டவனைப் பேய்கள் சூழ்ந்து அவன் உயிர்துறக்கும் வரையிலும் நரி முதலியன அணுகி ஊறுசெய்தலில்லாதபடி பாதுகாத்தல் 'பேய்க்காஞ்சி' யெனப்படும். ஒருவன் இறந்தபொழுது அவனுடைய திறங்களையெல்லாம் பிறர் எண்ணியெண்ணி அவன் இத்தன்மையோனென்று இரங்கிக்கூறுதல் மன்னைக்காஞ்சியாம்.

> "நின்னடி சேர்குநர்க் கெல்லா மின்னரு
> டிரிவின் றிச்செய்குவை மன்னே, மருவலர்
> நின்முகங் கண்டோன் றிரங்குவ ராயினது
> வரையாது வழங்குவை மன்னே, யொருசால்
> வெகுண்டுரை யாடுவை யெனினு நகையொடு
> மெம்முறு விழுமங் களைவோய் மன்னே,
> தாயினு மெமக்குத் தலையளி புரிந்து
> தந்தையிற் பெரிய தயவினை மன்னே".*

என்று ஆசிரியர் மறைமலையடிகள் தமது **சோமசுந்தரக் காஞ்சி**யிற் கூறுமாறு இது வருமென்க. 'இதனை ஆண்பாற் கையறு நிலையெனினும் அமையு' மென்பர் நச்சினார்க்கினியர். பின்னுமோரிடத்தும் இவர் ஆண்பாற் கையறுநிலை மன்னைக் காஞ்சியுள் அடங்குமென்பர்.

இன்னது செய்யேனாயின் இன்ன கெடுதியை யடையக்கடவேனென்று வீரத்தோடு கூறுதல் 'வஞ்சினக் காஞ்சி' யாகும். மறக்குடி மகளொருத்தி போரிற்புண்பட்டு விழுந்த தன் கணவனது உடம்பைப்பேய்கள் நெருங்காதபடி அவற்றைக்கடிந்து தானுந்தொடாது நிற்றல் 'தொடாக்காஞ்சி' யெனப்படுகின்றது.

* சோமசுந், மன்னைக்காஞ்சி, ௩௭-சச.

தன் அருமைக்கணவன் உயிர்நீத்தற்கு ஏதுவாயிருந்த வேற்புண்ணைக்கண்டு மனைவி அஞ்சுதலை 'ஆஞ்சிக்காஞ்சி' யென்ப. நச்சினார்க்கினியர் அஞ்சியென்பது ஆஞ்சியென நின்றதென்பர். ஆசிரியர் இளம்பூரணர் 'வேலிற்பேர்த்த மனைவி' யெனப் பாடமோதி, அவள்தன் கணவன் உயிர்விடுவதற்கு ஏதுவாயிருந்த வேலினாற் றன்னுயிரையும் மாய்த்துக்கொள்ளுதலை 'ஆஞ்சிக் காஞ்சி' யென்பதாமென்பர். தன் காதற்கணவனொடு தீயில் வீழ்ந்திறக்கும் கற்புடை மனைவியின் மிகுதிப்பாட்டைக் கூறுதல் 'ஆஞ்சிக் காஞ்சி' யாகுமென்பர் புறப்பொருள் வெண்பாமாலையாசிரியர். இன்னும் அவர் 'மன்னுயிர் நீத்தவேலின் மனையோள் இன்னுயிர் நீப்பினும் அத்துறையாகு' மெனக்கொளுவுரைத்து ஆசிரியர் இளம்பூரணர் கருத்தையுந் தழுவாநிற்பர். எனினும் இதன்கண் நச்சினார்க்கினியர் கோட்பாடே 'ஆஞ்சிக் காஞ்சி' யென்னும் சொற்பொருளுண்மைக்கும், நிலையாமையை யஞ்சும் மக்கணீர்மைக்கும் பொரிதொத்து நிற்றல் நன்கறியற்பாலதாகும். மாற்றரசன் வெற்றியுடையனாய் வலிந்து மேல்வந்து மகட்கொடைவேண்டும்போது, அக்கொடைக்குரிய வேளாளர் முதலியோர் அதற்கஞ்சுதல் 'மகட்பாற்காஞ்சி' யெனப்படுகின்றது. இனைய தொன்று 'உழிஞைத்திணை' க் கண்ணும் எடுத்துக் காட்டப்படுதலை இங்கு நினைவுகூர்க. தன் கணவன இறந்தஞான்று மனைவியாவாள் தன் முலைகளையும் முகத்தையும் அவன்றன் றலையோடு சேர்த்திக்கொண்டிறத்தல் 'தலையொடு முடித' லெனப்படும். ஆக இதனொடு தொகை இப்பத்தெனப்படுமென்று இவை தம்மை வேறுபிரித்தோதுவர் ஆசிரியர்.

இனி இவற்றின் றொடர்பாய் அவர் வகுத்துக்கூறும் வேறொரு பத்துத் துறைகளாவன : புகழ்மிக்க நன்மகனொருவன் இறந்துபட்டஞான்று அவனுக்குச் சுற்றத்தார் அவன் மாய்ந்தமைக்கு இறங்கி யழுதலும், சிறைப்பட்டவர்கள் தாமே தனியாயிருந்து தாங்குதற்கரிய துன்பமுற்று ஏங்குதலும் தன் கணவனோடு உடனிறந்துசெல்லும் மனைவியினது செலவுநோக்கிக் கண்டோர் பரிந்து கூறுதலும், கொடிய சுரத்தின்கண் தலைவியொருத்தி தன்னருமைத் தலைவனைப் பிரிந்து தனியாளாய்ப் புலம்பி

வருந்துதலும், இறந்தோர்மாட்டு இறவாதோர் செயலற்று நிலைமையால் மிக்க வருத்தமுற்றுப் புலம்புதலும், தன் இன்னுயிரனைய மனைவியைக் கணவன் இழந்து வருந்துதலும், அங்ஙனமே தன் ஆருயிரனைய கணவனை மனைவி இழந்து ஏங்கித் தவம் புரிந்தொழுகுதலும், தன் கணவனை முதுகாட்டில் வைத்தெரிக்கும்போது அவ்வெரியு மழலில் மனைவிதானும் புகுந்தழிதல்வேண்டித் தன்னை விலக்கினாரை மறுத்துக்கூறி அதன்கண் நுழைதலும், மறக்குடி மகனொருவன் பொருகளத்தில் புறந்தராமல் ஆண்மையுடன் பொருது உயிர்துறந்தவழி அவனுக்குத் தாயெனப்படுபவளும் அவனொடு இறந்து முடிதலும், உலகத்தின் நிலையாமைத் தன்மை எல்லார்க்கும் நன்கு விளங்கும்படி மக்களெல்லாருந் தன்கட் போந்து மாய்ந்தொழியத்தான்மட்டும் அங்ஙனம் மாயாது நிலை பெற்றிருப்பதான புறங்காட்டினை வாழ்த்தெடுத்தலுமா மென்க. இவைதாம் முறையே 'பூசன் மயக்கம்' 'தாங்கரும் பையுள்' 'மூதானந்தம்' 'முதுபாலை' 'கையறுநிலை' 'தபுதாரநிலை' 'தாபதநிலை' 'பாலைநிலை' 'தலைப்பெயனிலை' 'காடுவாழ்த்து' என்று கூறப்படும். இப்பத்துத்துறைகளையும் ஆசிரியர் தொல்காப்பியனார்,

"பேரிசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
மாய்ந்த பூசன் மயக்கத் தானும்,
தாமே யேங்கிய தாங்கரும் பையுளுங்
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமும்
நனிமிகு சுரத்திடைக் கணவனை யிழந்து
தனிமகள் புலம்பிய முதுபா லையுங்
கழிந்தோர் தேஎத் தழிபட ருறீஇ
யொழிந்தோர் புலம்பிய கையறு நிலையுங்
காதலி யிழந்த தபுதார நிலையுங்
காதல னிழந்த தாபத நிலையு
நல்லோள் கணவனொடு நனியழற் புகீஇச்
சொல்லிடை யிட்ட பாலை நிலையு
மாய்பெருஞ் சிறப்பிற் புதல்வன் பெயரத்

தாய்தப வரூஉந் தலைப்பெய னிலைப்பு
மலர்தலை யுலகத்து மரபுநன் கறியப்
பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு
நிறையருஞ் சிறப்பிற் றுறையிரண் டுடைத்தே"

என்று கூறுநிற்பர். இதன்கட் காணப்படும் 'பாலைநிலை' யென்பது இளம்பூரணத்தில் 'மாலைநிலை' யென்று காணப்படுகின்றது.

இனி இவ்வாறு ஆசிரியர் தொல்காப்பியனார் இக்காஞ்சித் திணைத்துறைகளை இருவகையாகப் பகுத்தோதியது, ஆண்பெண் பாலிருபாற்கும் அவர் வெவ்வேறுய்ப பிரித்துரைக்கக் கருதினமையானுமென்பர் நச்சினார்க்கினியர்; எனவே அவர் கூற்றுப்படி முதற்பத்துத் துறைகள் ஆண்பாற்கும், ஏனைப் பிறபத்துத்துறைகள் பெண்பாற்குமாக ஆசிரியர் வகுத்திட்டாரென்பது பெறப்படும். அற்றாயின், ஆண்பாற்குக் கூறியவையெனப்படும் முதற்பத்துத்துறைகளுள், 'இன்னகை மனைவிபேஎய்ப் புண்ணோற் றுன்னுதல் கடிந்த தொடாக் காஞ்சி' யென்பதும், 'நீத்தகணவன் றீர்த்த வேலிற்பேஎத்த மனைவியாஞ்சி' யென்பதும், 'முலைமுகனுஞ் சேர்த்திக் கொண்டோன் றலையொடு முடிந்த நிலை' யென்பதும் முதலியன பெண்பா லொழுக்கத்துட்பட்டும்; அங்ஙனமே பெண்பாற்கென்று கூறப்படும் பிறபத்துத் துறைகளுள் 'தாமே யேங்கிய தாங்கரும் பையு' ளென்பதும், 'கழிந்தோர் தேஎத் தழிபடருறீஇ யொழிந்தோர் புலம்பிய கையறுநிலை' யென்பதும், 'காதலி யிழந்த தபுதார நிலை' யென்பதும் முதலாயின ஆண்பால் நிலையுட்பட்டுங்கருத்து முரணுதலின், ஆசிரியரான் வகுக்கப்பட்ட அவ்விருவேறுவகையும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுமாறுபோல ஆண்பெண்பாற்கென்று பாற்பகுப்பு முறையிற் பகுக்கப் பட்டனவாகாவென்பது நன்குவிளங்கும். நச்சினார்க்கினியர் இவற்றிற்குக் கூறும் ஒப்புரைகள் அத்துணைப் பொருத்தமாய் அமைவனவல்லவென்பதும் அவற்றை நுணுகிக் கற்பாரெவரும் அறியாமற்போகார்: எனவே ஆசிரியர் தொல்காப்பியனார் காஞ்சித்திணைத் துறைகளிருபதையும் வாளாநிலையாமை கூறுதற்கெனவும், அந்நிலையாமை ஏதுவாக எவரும் நுகரவருந் துன்பநிலைமை கூறுதற்கெனவும் இருகூறுபடப் பகுத்தோதினரென்று

நூற்பாக்கருத்து அமைந்து காணுமாறே இயல்பின் மொழிந்து முடித்தல் நன்றென் றுணர்ந்துகொள்க.

இன்னும் இக்காஞ்சித்திணைத்தொடர்பாக வரும் 'முதுமொழிக்காஞ்சி' முதலாயினவெல்லாம் 'பொதுவியற்றிணைக்' கட்டுரையில் விளக்குதற் கிடம்பெறலின், அவைதாம் ஆங்கே அறியற்பாலன. இனி இக்காஞ்சித்திணை பெருந்திணையின் புறனுமாறும், முல்லை முதலாக அன்பொடு புணர்ந்த நடுவணைந்திணைக்கண் அடங்கியமையுமாறு முதலாயினவெல்லாம் இத்திணையோடு ஒருற்றுனினப்பட்டு முடியும் 'பாடாண்டிணைக்' கட்டுரைக்கண் விளக்குவாமென்பது.

தமிழரின் தொன்மை.

தமிழர், படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டு வருகின்ற பழங்குடியினர் ஆவர். "வழங்குவதுள் வீழ்ந்தக்கண்ணும் பழங்குடி பண்பிற் றலைப்பிரித லின்று" என்ற குறளுரையில் பரிமேலழகர், "பழங்குடி - தொன்று தொட்டு வருகின்ற குடி. தொன்றுதொட்டு வருதல் சேர சோழ பாண்டிய ரென்றாற் போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டு வருதல்" என்று கூறியிருப்பதினுல் தமிழரின் தொன்மை போதரும்.

"முதன் முதலில் மனிதன் தமிழ் நாட்டிலேயே தோன்றினன்" என்ற கொள்கையோர் பலராவர். தமிழர் முதலில் மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சியில் வாழ்ந்து வந்தனர். குடிவளம் பெருகப் பெருக அவர்கள் முல்லை, மருதம், நெய்தலென்ற நிலங்களில் படிப்படியாகக் குடி புகுந்தனர். அவர்கள் குறிஞ்சி நிலத்தில் இருந்த ஆதியூழியிலேயே தெய்வக்கொள்கையினராய் இருந்தனர். அக்காலத்தில் ஆரியர் தெற்கே வந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் முல்லை நிலத்தில் குடி புகுந்த காலை, ஆரிய

குறிப்பு:— இது சேலத்தைச்சேர்ந்த வேலூர் தமிழ்ப் பண்டிதர் திருவாளர் ச. கு. கணபதியார் பின் வருமாறு நவசக்தியில் எழுதியது.

மணம் தமிழ் நாட்டிலே வீசத்தொடங்கி யிருக்கவேண்டும். நானிலங்களின் தெய்வங்களைப்பற்றி ஆராயின் குறிஞ்சியானாகிய முருகன் பெயரொன்றே தனித் தமிழ்ப் பெயராய் மிளர்கின்றது. ஏனைய நில தெய்வங்கள் ஆரியர் புகுத்தியவையாம். இதனாலே தமிழர்கட்கு ஆரியர் சம்பந்தம் ஏற்பட்டது. அவர்கள் முல்லை முதலிய நிலங்களில் பரவிய பின்னரே என்பது போதரும்.

தமிழ்நாடு.

இரண்டூழிக் காலங்கட்கு முன்னர் தமிழ்நாடு குமரிக்குத் தெற்கே வெகுதூரம் பரவியிருந்தமை சங்கநூல்களால் தெரியக் கிடக்கின்றது. அந்நிலப் பரப்பு பிற்றை ஞான்று கடல் கொள்ளப்பட்டழிந்தது. "பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்—குமரிக் கோடும் கொடும் கடல் கொள்ள" என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இந்நிலப் பரப்பைக் கடல்கொண்டது முதுஊழியின் இறுதிக் காலத்திலென் அடியார்க்குநல்லார் கருதுகின்றனர்.

இராமாயண நிகழ்ச்சிக்கு முன்னரே தமிழர் ஓங்கியிருந்தனர். பரசுராமர் க்ஷத்திரியரைக் கருவறுத்து வந்தமை, அவர் தசரத ராமரைச் சந்தியாத முன்னர் என்பர். அப்பரசுராமர் ஒரு காலத்தில் புகாரையாண்ட சோழனைக் கொல்லவந்தாரென்றும், அது காலை அகத்திய முனிவர் சோழனைச் சிலநாள் மழுப்படையோன் கண்ணுக்குப் படாமல் கரந்துறையுமாறு பணித்தனர் என்றும் மணிமேகலை இருபத்திரண்டாம் காதையால் தெரிய வருகின்றது.

தொல்காப்பியர் பரசுராமரின் உடன்பிறந்தார் ஆவர். அவர் எழுதிய தொல்காப்பியம் காலத்தால் இராமயணத்திற்கு முந்தியதாய் இருத்தல் வேண்டும். தொல்காப்பியம் ஏற்பட்ட காலம் ஆதியூழியின் அந்தமென்று நச்சினார்க்கினியர் கூறுவர். இராமாயண நிகழ்ச்சிகள் நடந்தது இரண்டாம் ஊழியில் என்பது பிரசித்தம். அத் தொல்காப்பியம் தமிழரது உலகியல் வழக்கையே

கூறுவதாகும். அதிலிருந்து தமிழரைப்பற்றி நாம் அநேக விஷயங்களைத் தெரிந்து கொள்கின்றோம்.

தமிழர் வேட்டுவர், மறவர், ஆயர், கிழார், பரதவர் என்று பிரிந்திருந்தனர். ஐந்திணைபற்றி இப்பிரிவுகள் ஏற்பட்டன. அவர்கள் தெய்வப் படிமங்களைத் தொழுது வந்தனர். ஆண்மக்கள் 16 ஆண்டிலும் பெண்மக்கள் 12 ஆண்டிலும் மணம் புரிந்துகொண்டனர். பல தார மணமும் பரத்தையிற் பிரிவும் அக்காலத்திலேயே இருந்திருக்கின்றன. பழந் தமிழர்களுக்குத் திருமணச் சடங்குகள் கிடையா. ஆரியர்கள் கூறும் காந்தர்வ விவாகத்தை ஒரு புடை யொத்த களவுக்கூட்டமே பெருவழக்காயிருந்து வந்தது. திருமணச் சடங்கு ஆரியர்களால் நிருமிக்கப்பட்ட விஷயம். "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் - ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்று ஆசிரியர் தொல்காப்பியர் கூறுவதிலிருந்து அறியக்கிடக்கின்றது. தொல்காப்பியர் காலத்திலேயே ஆரியாசாரம் தமிழ் நாட்டில் வேரூன்றிவிட்டது. ஐந்திணை மக்கள் ஆரியரால் கீழோராகக் கருதப்பட்டனர். "மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம் – கீழோர்க்காக்கிய காலமுமுண்டே" என்று ஆசிரியர் கூறுவதைக் காண்க.

இராமாயண காலத்துத் தமிழரைப்பற்றி நாம் தெரிந்து கொள்ளக்கூடிய சாதனங்கள் மிகச்சில. வால்மீகியார் இராமாயணத்துள் கிஷ்கிந்தா காண்டத்துள் தமிழ்நாட்டைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அக்குறிப்புக்கள் அடங்கிய சுலோகங்கள் இடைச் செருகல் என்பது பலரது அபிப்பிராயம். அச்சுலோகங்கள் ஒன்றில் 'பாண்டிய நாடு' என்ற பெயர் காணப்படுகின்றது. 'பாண்டியர்' என்ற பெயர் பாரத காலத்தில் தோன்றியதாகப் பலர் கூறுவர். பாண்டு புத்திரனாகிய அருச்சுனன் மதுரையை ஆண்ட ஒரு வழுதி மகளை மணந்து ஒரு தோன்றலை யளித்தான். அத்தோன்றலும் அவன் வழியினரும் பாண்டியர் எனப்பட்டார்கள். பாண்டியர் ஆண்ட நாடு பாண்டிய நாடு ஆயிற்று. இராமயண நிகழ்ச்சிக்குச் சமகாலத்திருந்த வால்மீகர் பாரத காலத்தில் ஏற்பட்ட ஒரு பெயரைத் தம் நூலில் புகுத்தியிருக்க நியா

யமில்லை. ஆகையால் அச்சுலோகமும் அதனை யடுத்துள்ள மற்றும் சிலவும் பாரத காலத்திற்குப் பின் ஒருவரால் புகுத்தப்பட்ட இடைச் செருகல் என்பதில் ஐயமின்றாம். அன்றேல் பாண்டியர் என்ற பெயருக்குப் பிறிதொரு காரணம் கற்பிக்க வேண்டுமன்றே.

இராமாயண காலத்திற்கு முன்னரே தமிழர் பிரபல மடைந்திருந்ததாக மேலே கூறப்பட்டது. இனி இராமயண காலத்துத் தமிழரைப்பற்றி ஆய்வாம். ஆரியருக்கும் இந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்துவந்த ஆரியரல்லாத ஒரு சார் மக்களுக்கும் நடந்த போரைச் சிறப்பித்துக் கூறுவதே இராமாயணமாகும். இப்போரில் ஆரியர் வெற்றியடைந்தது பிரசித்தம். அவர்கள் தங்கள் வெற்றிப் பிரதாபத்தைப் பலவாறு புனைந்துரைத்தனர். தங்கள் பகைவரை அரக்கர் என்று எழுதி வைத்தனர். அவர்கள் பெயர்களைத் தம் நூல்களில் புகுத்துங்கால் தம்மொழிக்குத் தக்கவாறு மொழிபெயர்த்துக் கொண்டனர். நடந்த விஷயங்கள் நூல்களில் புகுங்காலத்து பாரித்துத் தூலித்துப்போயின. உரல் விரலான சந்தர்ப்பங்களும் இல்லாமற் போகவில்லை.

வானரர் யார் ?

இராமாயணத்துள் அரக்கர் என்று சொல்லப்படுவோர் ஒருகால் தமிழராவார் என்று எண்ணுவோர் பலர். இராமருக்குத் துணைபுரிந்த கிஷ்கிந்தா சிகாமணிகள் உண்மையில் வாநரர்களாயிருந்திருக்கமாட்டார்கள். தோற்றத்தில் விகாரமானவர்களாய் இருந்தமையால் ஆரியர் அவர்களை வானரர் என்று கூறியிருக்கலாம். வானரர் என்று வால்மீகியார் குறிப்பிடுவது தக்ஷிணத்திலும் தென்னாட்டிலுமுள்ள மலைச்சாதி மக்களாக இருக்கலாம். மலைச்சாதியாரில் வெகு சிலர் இக்காலத்தும் தோற்றத்தில் வானரங்களை ஒத்திருக்கின்றனர். செயலைக்கொண்டு அவர்களை வானரர் என்று வால்மீகியார் கூறினார் என்றதும் அமையும். உண்மையாக நடந்தவற்றைப் பாமர பண்டித ரஞ்சிதமாகக் கதைபோல் கூறுமிடத்துச் சில பொய்க் கற்பனைகளும் கலந்து கூறுவது எவர்

க்கும் சகஜம் தான். தென்னாட்டவரில் வேறாய வால்மீகர் கூற்றைக்கொண்டு ஆராயும்போதே அரக்கர் என்று சொல்லப்பட்டவர்களின் நாகரிக வளர்ச்சியும் செல்வப் பெருக்கும் தெற்றெனப் புலனாகும்.

கொடுக்கூர் கோவிந்தன்

[காழி. சிவ. கண்ணுசாமி B.A.]

(ருசஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாங் கூறு.

தாடிக் காரி.

கொட்டகையினுட் சென்ற மூவரில் வயதேறியவர்களாகத் தோன்றிய இருவரும் சிறிது நேரத்திற்குள் வெளிவந்தனர்; நாகரீகமாக உடையுடுத்திருந்த இளைஞர் மட்டும் உள்ளேயே தங்கி விட்டனர் போலும். இவ்வாறு உட்சென்ற மூவரில் இருவரே திரும்பிவந்தனர் என்பதை ஒருவரும் பார்க்கவில்லை.

ஒருவரும் பார்க்கவில்லையென்றே நண்பர்கள் மூவரும் நம்பினார்கள். அடுத்தமைக்கப்பட்டிருந்த பீதாம்பர யோகியாரின் கொட்டகையினுள்ளிருந்து இரண்டு கூர்மையான கண்கள் தங்களை விடாமல் தொடர்ந்து நோக்கிக் கொண்டிருந்தன என்பது அவர்களுக்கு எவ்வாறு தெரியும்?

தம்மண்ணன், பட்டக்காரன் ஆகிய இரு வயதேறியவர்களும் வெளிவந்த சற்று நேரத்தில் யோகியாரின் கொட்டகைக்குட் குறிகேட்கச் சென்ற இரண்டு நாட்டுப்புற வாசிகளும் வெளித்திரும்பினர். யோகியார் மிகவும் சுருக்கமாகக் குறி கூறினார் போலும்! வெளிவந்தவர்கள் ஏமாறிய முகத்தோற்றத்துடன் காணப்பட்டமையால் யோகியார் கூறியது அவர்கள் நெஞ்சுகந்தனவாயில்லை யென்பதை எளிதில் எவரும் ஊகித்துக் கொள்ளலாம்.

"சொல்லறத்தை நல்லாப்புரியும்படியாச் சொல்லிஅழுதால்லே தேவிலே. வாயிலேருக்கிற முத்து சிந்திப் பூடுறமாதிரி குட்டா

ரெண்டொண்ணு சொல்றது; அதிலே காதிலே உயுரது பாதி உயாதது பாதி—ஊம். என்னமோ நாம்ப குறித்த ரெண்டணு துட்டுக்கு இம்மாத்ரம் போதாதாண்ணு நெனச்சிக்க வேண்டியது தான் ஒனக்குப் பெண்டாட்டி மூணு பேநாணாலும் கடைசிலே நீ செத்துப்போனா ஒம்மேலே உயுந்தய ஒருத்திகூட உசிரோடெ இருக்க மாட்டாண்ணு சொன்னாரே? அதுலே என்னுப்பா பலன் ஒனக்கு? இருந்தாலும் மூணுவது பெண்டாட்டி நெறயா சொத்து கொண்டாருவாண்ணுவது சொல்லி வைச்சாரே. ஒம்பாடு வேட்டைதான்." என்று ஒருவன் கூற அதற்கு மற்றவன்.

"ஒனக்கு பத்து புள்ளெங்களும் ஏயு பொண்ணுங்களும் பொறக்கிண்ணும் சொன்னாரே ஒனக்குதான் என்ன கொறெ" என்று பதில் அளித்துச் சொன்னான். இவ்வாறு இவர்கள் பேசிக் கொண்டது தம்மண்ணனுடைய காதுகளிலும் பட்டக்கார னுடைய காதுகளிலும் நன்றாக விழுந்தது.

இது நிற்க, யோகியாரின் கொட்டகையினுட் சற்று நோக் குவாம்.

குறி கேட்க வந்த நாட்டுப்புறவாசிகளிருவரையும் யோகியார் வேண்டுமென்றே இரண்டொரு வார்த்தைகளிற் குட்டாகக் குறி கூறி விரைவிலனுப்பிவிட்டார். அஃது ஏனெனில் பக்கத்துக் கொட்டகையின் மீது கண் வைத்திருந்த யோகியாரின் வேலைக் காரன் ஏதோ முக்கியமான செய்தியைக்கூற வந்து காத்து நின் றதினாலேயே யாகும். குறிகேட்க வந்தவர்கள் வெளியே சென் றவுடன் வாயிற்படித் தட்டியை இறுக்கி மூடச்செய்து யோகி யார் தானணிந்திருந்த முகமூடியை மேலே தூக்கிக் கொண்டார். ஆ! நெற்றியில் எவ்வளவு ஆழமான தழும்பு! ஒரு கண் கருப் புத் துணியினால் மறைக்கப்பட்டிருந்தது!! நீண்டு வளைந்திருந்த மூக்கு அவன் கொடுக்கூர் கோவிந்தன் என்பதை ஐயமற விளக் கிற்று.

"கருப்பையா! உண்மையாக அவர்கள் தானா!? நன்றாக உற்று நோக்கினாயா? அப்படியானால் அதோ வெளியில் நிற்கும்

இருவரும் பட்டக்காரனும் தம்மண்ணனுமாக வேண்டும். சே ! நீ மட்டும் அவ்வாறு உறுதியாகக் கூறுவிட்டால் நான் அவர்களல்ல என்று திட்டமாய்க் கூறிவிடுவேன். திருட்டுப்பயல்கள் எவ்வளவு திறமையாக உருமாறி யிருக்கின்றனர் ?"

கருப்பையன்:—" ஆம், அவுகதான் சாமி. நான் எப்படிப் பாத்தேண்ணு சொல்றேங் கேளுங்க. மொத மொத அந்த கருப்பு வேலைக்காரெனப் பாத்தேன். அவம் பின்னாலே சேப்பு வீசைக்காரன் போயிகிட்டிருந்தான், ரெண்டு பேருமா காமாச்சி கடெக்குள்ளார நொளஞ்சி ஆளுக்கு ஒரு தோசை வாங்கித் திங்க ஒக்காந்தானுக. அப்பம் எங்கிட்டோ யிருந்து ஒரு கொறவமாதிரி ஒருத்தன் வந்து சேப்பு வீசெக்காரன் தோளைத்தொட்டான்.

யோகியார்:—" சரிதான். அவன் அத்துடன் நடுநடுங்கிப் போயிருப்பானே. போலீஸ்காரன் பிடித்துக்கொண்டானென்று பாதி யுயிர் போயிருக்குமே அவனுக்கு ?"

கருப்பையன்:—" அது எனக்குத் தெரியுங்களா ?" கொறவந் தொட்ட ஒடனே சேப்பு வீசைக்காரன் அவம் பக்கம் திரும்புனான். அதுக்குள்ளார சட்டுண்ணு அவந் தோசையை எடுத்துக் கருப்பங்கிட்ட குடுத்தூட்டான் கொறவன். அப்பமே இந்தப் பசக மூணுபேரும் ஒண்ணிண்ணு கண்டுகிட்டேன். பொறவாலே கருப்பனுக்கும் சேப்புவீசெக்காரனுக்கும் சண்டெமாட்டிகிட்டுச்சி. வீசெக்காரன் குத்த கையை ஓங்கினப்பம் யாரோ செரு வபசா வெள்ளையுஞ் சள்ளையுமா வேட்டி கட்டிக்கிட்டு ஒருத்தன் வந்து தடுத்தான். அவனெக் கண்டதும் வீசெக்காரன், கருப்பன், கொறவன் எல்லாப் பசகளும் இன்ன தாவுக்குப்போனுண்ணு தெரியுமா நளுவிட்டானுவ. சரிதான் இந்த செருவயசா யிருக்கிற புள்ளிதான் நம்ப ஆசாமி சம்புலிங்கம் இண்ணு கண்டுகிட்டேன். ஏ ஐயா ! பாத்தா எட்டியாபொரத்து சமீந்தார் மவங்கணக்கால்லே சாமி இருந்தான் அவன் ?";

யோகியார்:—" ஆம், அப்படித்தானிருப்பான். பிறகு ?"

கருப்பையன்:—" இவன் வெளிலே நிக்க வச்சிக்கிட்டிருந்த இந்த ரெண்டு கெழட்டாசிமிங்களோடே சேந்துகிட்டு இந்தப்பக்கம் வந்தான். வந்து பக்கத்துக்கொட்டாக்குள்ளார மூணுபேரும் போனுக. இப்பம் இந்த ரெண்டு பேருதான் வந்திருக்கானுக. ஓர்த்தன் உள்ளேயே குத்த வச்சிக்கிட்டான் போலேருக்கிது சாமி"

யோகிகள்:—"நல்ல வேலை செய்தாய் இனி நீ போய் வாயிற்படியில் எச்சரிக்கையாயிரு. ஒருவரையும் என்னைக் கேளாமல் உள்ளே விடவேண்டும்." என்று கூறி விட்டுப் பக்கத்துக் கொட்டகையின் புறமாக அமைக்கப்பட்டுக் கருப்புத் திரை விடப்பட்டிருந்த ஒரு சாளரம் போன்ற திட்டி வாயிலின் அருகே சென்று உற்றுக் கேட்டான்.

கருப்பையன் கோவிந்தனுடைய பழைய கூட்டாளிகளில் ஒருவனல்லன். சிறையிலிருந்து தப்பி வந்த கோவிந்தனுக்குத் தன்னுடைய கூட்டாளிகளுடன் மீண்டும் சேர எதனாலோ விருப்பமில்லை. ஒரு நாள் வழியில் கருப்பய்யனைக் கண்டான். தன்னுடைய வேலைக்குத் தகுதியானவன் போலத் தோற்றியமையாலும் அவன் முன் ஒரு யோகியாரிடத்தில் வேலைபார்த்ததாகச் சொன்னமையாலும் தன்னிடம் அமர்த்திக் கொண்டான்.

கருப்பையனும் திங்கள்தோறும் சரிவரச் சம்பளம் பெற்று வந்தமையால் நன்றியறிதலுடன் உண்மையாயுழைத் துவந்தான்.

சிறையிலிருந்து தப்பிய கோவிந்தனைப் போலீஸார் பிடிக்க முயன்றதாகவே தெரியவில்லை. நாடறிந்த பார்ப்பனனுக்குப் பூணூல் ஏதுக்கு என்றதுபோல் கொடுக்கூர் கோவிந்தனை யறியாத சென்னை மாந்தரில்லையாதலால் யார் கண்ட போதிலும் பிடித்துக்கொண்டு வந்து விடுவார்கள் எனக் கருதினார்களோ அன்றிக் கோவிந்தனுக்குத் தெரிந்த பல செல்வந்தர்கள் மேனிலையிலிருந்தமையால் அவர்கள் தம் மறைகள் வெளிவராது காக்கப் படவேண்டியது இன்றியமையாததாகும் என்று கருதினார்களோ

என்னவோ தப்பி வந்த கோவிந்தனைத் திரும்பப் பிடிக்க நினைத்தவர் யாருமில்லை.

இப்பொழுதோ கோவிந்தன் மற்றெருருவனுடைய பெயரைப் பூண்டு கொண்டு நடித்து வருகின்ருன். தமிழ் நாடெங்கும் பெயர் பெற்றிருந்த பீதாம்பர யோகியாரின் பெயரை வைத்துக் கொண்டால் தன்னை யாரும் ஐயுறமாட்டார்கள் என்று அறிந்தே அவ்வாறு செய்தான் கோவிந்தன். உண்மைப் பீதாம்பர யோகியார் ஊர் ஊராய்ச் சென்று குறிசொல்வதை விட்டு நெடுநாளாயின. கோமளேச்சுரன் பேட்டையிலிருந்த சொந்த வீட்டில் குறிசொல்லி வந்ததை நிறுத்திக் கூட நீண்ட நாட்களாயின.

முதிர்ந்த அறிவாளிகளெனக் கருதப்பட்ட பலரும் பீதாம்பர யோகியார் வந்திருக்கின்ருரெனத் தெரிந்ததும் அவரிடம் சென்று குறிகேட்டு வந்தனர். அப்படியிருக்க நமது திவான்பகதூர் முதலியாரைப் பற்றிக் கேட்பானேன். அன்று பொழுது எப்பொழுது புலரும் என்று பார்த்திருந்து முதல் வேலையாக யோகியாரிடம் வந்து தன் எண்ணம் நிறைவேறுமா என்று குறி கேட்டார். சம்புலிங்கம் ஏதோ சூழ்ச்சி செய்து முதலியாரைக் குறும்புத்தனமாக அலைக்கழிக்கக் கருதியிருக்கின்ருரென்பதையும் அதைச் செய்து முடிக்க அவனே நேரில் வருவானென்பதையும் உய்த்துணர்ந்து கொண்ட யோகியாரான கோவிந்தன் அதுதான் சம்புலிங்கத்தின் மீது தான் கொண்ட வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள ஏற்ற சமயமெனத் துணிந்து "ஓகோ வெற்றி உங்களது தான் முதலியார்வாள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். உங்கள் கருத்து நிறைவேறத் தடையில்லை" என்று கூறியிருந்தான்.

முதலியாருக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. போலீஸ் புலி கோவிந்தசாமி நாயுடுவைக் கூப்பிட்டு மூச்சு விடாமல் பேசினுர். நாயுடுகாரும் கள்வர் தலைவன் எனக் கருதப்பட்டு வரும் சம்புலிங்கத்தை அன்றே எளிதிற் பிடித்துப் பெருமையடையப் போவதாக நினைத்து நினைத்துக் கைகளைக் குழைத்த வண்ணம் கூத்தாடிக் கொண்டிருந்தார்.

கருப்பையன் உண்மையுடன் மிகவும் திறமையாக வேலை செய்திருக்கிறான் என்பதைக் கண்டு கோவிந்தன் மகிழ்ச்சியுற்றான். ஆகவே சம்புலிங்கமும் அவனுடைய தோழர்களும் வந்திருந்தனர்; போலீஸ் வீரர்களும் விரைவில் வந்து விடுவார்கள். கொண்ட மீனான திவான்பகதூர் முதலியார் வந்ததும் தூண்டிலையெறிந்து வரால் மீனான சம்புலிங்கத்தைப் பிடிக்க வேண்டியது தான்.

இவ்வாறு நேரக்கூடும் என்பதைச் சம்புலிங்கம் உணராதவனல்ல; ஆகவே இதற்கானவற்றையெல்லாம் செவ்வனே ஆய்ந்து முன் கூட்டியே தக்க ஏற்பாடுகள் செய்திருந்தான். ஆனாலும் தன் பிறப்பெதிரியான கோவிந்தன் யோகியாருருவங் கொண்டு நடுவே முளைப்பான் என்பதை அவன் எப்படி அறிந்து கொள்ள முடியும்? தாடிக்காரியின் கொட்டகைப் பக்கலில் யோகியாரின் கொட்டகை அமைக்கப்பட்டு அதனுள் கொடுக்கூர் கோவிந்தன் சமயம் பார்த்துத் தன் மீது வஞ்சந் தீர்க்கக் காத்திருப்பான் என்பதை அவன் கண்டானா? எதிர்பாராத இந்த நிகழ்ச்சியை அவன் அறிந்திருக்கமுடியாதாதலால் அதையே துணையாகக் கொண்டு தன் கரும முடித்துச் சம்புலிங்கத்தைத் தானிருந்த சிறைக் கூட்டத்துள் அடைத்து விடுவது எனக் கோவிந்தன் உறுதியாக முடிவு கட்டியிருந்தான்.

கருப்பையனை வாயிற்படியிற் காவல் வைத்து விட்டுத் தாடிக்காரியின் கொட்டகைப்புறம் அமைக்கப்பட்டிருந்த திட்டிவாயிலில் காதுகளை வைத்து அடுத்த கொட்டகையினுள் ஏதாவது பேச்சு நடக்கிறதா என உற்றுக் கேட்டான். இரண்டு ஆண் பிள்ளைகள் மெல்லிய குரலில் பேசிக் கொள்வது கேட்டது. கோவிந்தனுக்கு இது ஒன்றும் விந்தையாகத் தோற்றவில்லை. ஏனெனில் தாடிக்காரி துரையம்மாள் உண்மையில் துரைசாமி தான் என்றும் தாடி முளைத்த பெண்பிள்ளை என்பது முழு ஏமாற்று வித்தை என்றும் அவன் முன்னரே அறிவான். ஆகவே அத்துரைசாமியின் குரல் ஒன்றுபோக மற்றது சம்புலிங்கத்தினது தான் என உணர்ந்து கொண்டான். ஆயினும் என்ன

பேசிக்கொள்கிருர்கள் என்பது அவன் காதுகளில் தெளிவாக விழவில்லே. சிறிது நேரத்தில் தாடிக்காரியின் கொட்டகையின் பின் புறத்திலுள்ள வாயில் வழியாக துரைசாமி வெளியேறிய தைக் கண்டான். சம்புலிங்கம் எத்தகைய சூழ்ச்சியைக் கருதி யிருக்கிருன் என்பதை ஒருவாறு ஊகித்துக் கொண்டான்.

" சாமி" என்று கருப்பையன் இச்சமயத்தில் மிகவும்தணிந்த குரலிற் கூப்பிட்டான். "என்ன கருப்பையா?"

"ரெண்டு ஆசாமிங்க குறிகேக்க வந்திருக்காக" என்று சொன்ன கருப்பையன் மீசையில்லாத தன் முகத்தில் மீசை யிருக்க வேண்டிய இடத்தில் தொட்டுக் காட்டியும் கொட்டகைக் குள் தொங்கவிடப்பட்டிருந்த கருப்புச் சீலேகளே இழுத்திழுத் துக் காட்டியும் வந்திருப்போர் முனியனும் பரட்டையும் எனக் குறிப்பாக உணர்த்தனுன்.

"வரச் சொல்" என்று குரலே மாற்றிக் கூறியவண்ணம் விரைவாகத் தன்னிடத்திற்குச் சென்று கோவிந்தன் தன் முக மூடியைக் கீழே தள்ளிவிட்டுக் கொண்டு உட்கார்ந்தான்

"உண்டிலே எவ்வளவு போடுறது! என்று கேட்டான் முனி யன்.

"இரண்டு ரூபாய்" என்ருன் கருப்பையன். கருப்பையன் கெட்டிக்காரன். "தான் தேடாப் பொன்னுக்கு மாற்றுமில்லே உறையுமில்லே" யென்பதை யறிவானுதலால் வந்திருக்கும் இர ண்டு திருட்டு ஆசாமிகளும் கேட்டதைக் கொடுப்பார்கள் என் பது தெரிந்தே கூறிஞன்.

பணமும் உண்டிப் பெட்டியில் விழுந்தது திரைச் சீலேயும் நீக்கப்பட்டது. கொட்டகையினுட்புறத்தைப் பார்த்த முனிய னும் பரட்டையும் மருண்டு விட்டனர். எங்கும் பேய்க்கருப்பு நிறம் வாய்ந்த திரைகள்! இருந்த ஒரு விளக்கும் பச்சைத் திரை யிட்டு மறைக்கப்பட்டிருந்தது! ஒரு கருங்காலி பீடமமைத்து அதன் மேல் பெரியதோர் எஃகு குண்டு வைக்கப்பட்டிருந்த

பீடத்தினருகில் யோகியார் மஞ்சளுடை யணிந்து கையில் மாத் திரைக்கோல் தாங்கியவராய் உட்கார்ந்திருந்தார். இதை யெல்லாம் பார்த்த பரட்டைக்கும் முனியனுக்கும் கொடுத்த பணம் வீண் போகவில்லை என்ற ஒரு எண்ணம் உண்டாயிற்று.

ஆயினும் அச்சத்தினால் பரட்டையின் நாவுலர்ந்தது; முனி யனது தொடைகள் நடுக்குற்றன.

இருவரது கைகளையும் நீட்டச்சொல்லி வரைகளை உற்று நோக்கினான். கோவிந்தன் பிறகு தன் மாத்திரைக் கோலின் ஒரு முனையைத் தன் புருவங்களுக் கிடையே வைத்தவனாய்ச் சற்று ஆழ்ந்து உன்னித் தலை நிமிராமலிருந்தான். இதனால் அவ னுடைய நீண்டு வளைந்த மூக்கை இவர்கள் பார்ப்பதற்கில்லை.

கீழே குனிந்தபடியே தணிந்த குரலில் கோவிந்தன் வந்திருந் த இருவரும் திகைக்குமாறு பல உண்மைகளைப் பகர்ந்தான். மிகவும் தேர்ந்த யோகியாரென்றே அவர்கள் நம்பிவிட்டார்கள். தங்களுடைய முக்கியமான மர்மங்களை யெல்லாம் குறிப்பாக அவன் எவ்வாறு கூறினானென்பது அவர்களுக்கு விந்தையாகவே இருந்தது. "முடிவில் இருவரும் தூக்கு மரத்தில் தான் தொங் கப்போகிறீர்கள்" என்று கூறி "இனிப் போகலாம்" என்றான்.

இவர்களுக்கும் விட்டாற்போதும் என்றாய் விட்டது. விரைந்து வெளியே வந்து "உஸ்" என்று பெருமூச்சு விட்டார் கள். நீல நிற ஆகாயம் திண்ணமாக மேலே இருக்கின்ற தென்பதைப் பார்த்த பிறகுதான் இவர்களுக்கு நல்ல உயிர் வந்தது.

"ஊமைக் கோட்டான் போல உறுமி உறுமி வயித்தை ஒரு கலக்கு கலக்கிட்டாரு அந்த சாமியார்" என்றான் பரட்டை.

"பயலே, ஒன் வயித்தெக் கலக்கிறது சாமியாரு சொன்ன தில் லேடா.

காமாச்சி கடைகார தோசை, வேணும் ஒனக்கு ஊரான் சொத்துக்குப் பேராசைப் பட்டா அப்படித்தான்" என்று

தானிழந்த பாதி தோசையை நினைத்துப் பதிலிறுத்தான் முனியன்.

இவர்களுக்கிருந்த கலக்கத்தில் எதிரே காசி வந்தது கூடத் தெரியவில்லை. ஆனால் வட நாட்டுக் குறவனைப்போல் வந்த காசியை யோகியார் கொட்டகையிலிருந்த கருப்பையுன் கண்டு கொண்டான்.

"சாமி, அதோ கொறப் பயல். பையப் பையப் பக்கத்துக் கொட்டாய்க்குப் பின்னாலே போறான்; என்னமோ திருட்டு வேலே செய்யப் போறம் போலே இருக்கு" என்றான்.

கோவிந்தனும் உடனே திட்டி வாயிற்புறம் வந்து அதை நோக்கினான்; அத்துடன் சற்று தூரத்தில் இரண்டு உடை யணியாத போலீஸ் வீரர்கள் வருவதையுங் கண்டான். காசி என்ன செய்யப் போகிறான் என்று தெரியாவிட்டாலும் சம்புலிங்கத்தின் சூழ்ச்சி துவங்குகிறது எனக் கண்டு கொண்ட கோவிந்தன் தானும் எச்சரிக்கையாயிருக்கவேண்டு மென உணர்ந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் திவான் பகதூர் முதலியார் தன்னுடைய பருத்த உடலேச் சுமந்து கொண்டு பெருமிதத்துடன் வந்தார். அவரைக் கண்டதும் கோவிந்தன் தன் வஞ்சந்தீர்வது திண்ணமெனக் கருதி களிகூர்ந்தான். ஏனெனில் அவன் நினைத்த வண்ணமே இதுவரை ஒவ்வொன்றும் நடைபெற்று வந்திருந்தது. போலீஸ் வீரர்களும் வந்திருந்தனர். இனி விரிக்கும் வலேயிற் குருவி விழவேண்டியதுதான்.

பெருமிதத்துடன் ஆடி யசைந்து வந்து கொண்டிருந்த முதலியார் தாடிக்காரியின் கொட்டகைக்கெதிரில் வந்ததும் சற்றுத் தயங்கிநின்று சுற்று முற்றும் நோக்கினார். போலீஸ் புலி கோவிந்தசாமி நாயுடுவைக் காணவில்லை; ஆயினும் போலீஸ் உடையணியாத இருவீரர்களில் ஒருவன் ஒரு குறிப்புக்காட்டவே முதலியார் தேறிய நெஞ்சுடன் கொட்டகையினுள் நுழைந்தார்.

நுழைந்த முதலியார் அயர்ந்து நின்றார். ஏனென்றால் முதற் பார்வைக்கு உள்ளே ஒருவரும் அவர் கண்களில் தென்படவில்லை. கொட்டகையின் முற்பகுதி யெல்லாம் வெற்றிடமாக இருந்தது. பிற்பகுதியிலிருந்த மேடைமீதோ கொட்டகை வேயப்படவில்லை. அதற்குப் பதிலாக ஒரு கூடாரம் அடிக்கப்பட்டிருந்தது. அக் கூடாரத்தின் அடியிலிருந்த மேடை இரண்டு பிரிவாக ஒரு திரை விட்டுப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆ! அதோ அத்திரையின் முன் போடப்பட்டிருந்த இருக்கையின்மீது அமர்ந்திருப்பது யார்? சம்பு லிங்கமா? இல்லை, இல்லை. தாடிக்காரியல்லவோ!

(தொடரும்)

மதிப்புரை

1 நளன் அல்லது விதியின் வெற்றி

இதன்கண் நளன் சரிதை நடிக்கத் தக்க முறையில் நாடகவடிவில் எளிய இனிய செந்தமிழ் நடையில் மிகவும் அழகியதாக திரு. க. இராம சாமி அய்யங்காரவர்களால் எழுதப்பட்டிருக்கின்றது. எதனையும் நாடக வடிவில் தான் கற்றார் கல்லாதார் யாவருக்கும் எளிதில் பொருள் விளங்குமாறு செய்யலாமாதலான் அம்முறையைக் கடைப்பிடித்து நூலெழுதிய இந்நூலாசிரியருக்குத் தமிழ் மக்கள் பெரிதும் கடமைப் பட்டிருக்கின்றார்கள்.   இதன் விலை அணு 12.

கிடைக்குமிடம்:-   நூலாசிரியர்,

2, ஆறுமுகஞ் செட்டித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

2, பிரசவ காலத்தில் செய்ய வேண்டிய முதல் உதவி

இது டாக்டர் U. இராமா ராவ் அவர்களால் எழுதப்பட்டது, தமிழ் மக்கட்கு இத்தகைய நூல்கள் இன்றியமையாது வேண்டப்படு வனவாகும்.   இதன் விலை, அணு 6

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ கிருஷ்ணன் பிரதர்ஸ்.

323, தம்பு செட்டித்தெரு, சென்னை.